Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகாகவி பாரதியார்

மணிமொழிகள்

டாக்டர் நல்லி குப்புசாமி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Foundatio

urukul Ka

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय हरिद्वार

वर्ग संख्या.........
आगत संख्या............

पुस्तक-विवरण की तिथि नीचे अंकित है। इस तिथि सहित ३०वें दिन तक यह पुस्तक पुस्तकालय में वापिस आ जानी चाहिए अन्यथा ५० पैसे प्रति दिन के हिसाब से विलम्ब दण्ड लगेगा।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகாகவி பாரதியார்
மணிமொழிகள்

With Best Compliments From:
NALLI CHINNASAMY CHETTY
SILK GOODS MERCHANTS
T. NAGAR, CHENNAI-600017

102875

டாக்டர் நல்லி குப்புசாமி

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம்
2, மாடல் ஹவுஸ் லேன்,
சி.ஐ.டி. நகர்,
சென்னை – 600 035.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல் பற்றிய விவரம்

முதற்பதிப்பு	15 ஆகஸ்டு 1995
நூலின் வடிவம்	கிரவுன் அளவு
பக்க அளவு	136 பக்கங்கள்
அச்சுப் புள்ளி	11 புள்ளிகள்
அச்சுத்தாள்	11.6 கிலோ
கட்டமைப்பு	சாதாரண அட்டை
அச்சுக் கோப்பு	மாருதி பிசினஸ் சிஸ்டம்ஸ், சென்னை - 18.
அச்சிட்டது	ரவிராஜா ஆப்செட், சென்னை - 14.

விலை ரூ.20-00

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமர்ப்பணம்

திருமதி நல்லி கண்ணம்மாள்

ஈன்றெடுத்து ஆளாக்கிய

எந்தையும் தாயுமானவரின்

திருவடி மலர்களுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னுரை

இந்த உலகத்தில் எத்தனையோ சித்தர்களும், மகாபுருஷர்களும் அவதரித்திருக்கின்றார்கள். மண்ணிலே நல்லவண்ணம் வாழ வேண்டுவதற்கான வழிமுறைகளை அவர்கள் வகுத்துக் காட்டியதோடு, அந்த நெறிகளைத் தாமே கைக்கொண்டு வாழ்ந்து காட்டவும் செய்தனர்.

அந்த அவதார புருஷர்களின் வாழ்வும் வாக்கும் நமக்குச் சிறந்த வழிகாட்டிகள்.

அவ்வகையில் நம்வாழ்வைச் செம்மைப்படுத்திய அண்மைக் கால ஆன்றோர்களில் ஒருவர்தான் மகாகவி பாரதியார்.

மக்கள் வாழ்வு நிலையை உயர்த்தவும், நாட்டு விடுதலைக்காகவும் பாரதியார் பெரிதும் பாடுபட்டார்.

கவிதைகள், கட்டுரைகள், கதைகள் - ஆகியவற்றின் மூலமாகப் பாரதியார் நாட்டு மக்கள் இன்புற்று வாழ்வாங்கு வாழ வழிகாட்டியுள்ளார்.

பாரதியாரின் எழுத்துக்களில் நான் பல புதுமைகளைக் கண்டு உணர்ந்து இன்புற்றேன்.

மனிதன் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நெறிமுறைகளை எல்லாம் மிக அழகாகவும், தெளிவாகவும், அனுபவ பூர்வமாகவும் பாரதியார் எடுத்துச் சொல்லியுள்ளார்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்"

என்று மகாகவி பாரதியார் தம் பாட்டிலே சொன்ன வரிகளின் எதிரொலிகளை அவருடைய படைப்பு இலக்கியங்களிலேயே காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாரின் எளிமையான தமிழ் நடையால் நான் பெரிதும் ஈர்க்கப்பட்டேன்.

எளிமையும் இனிமையும் கொண்ட தமிழில் மகாகவி பாரதியார் சொன்ன கருத்துக்கள் என் நெஞ்சில் ஆழப் பதிந்துவிட்டன.

பாரதியாரின் இலக்கியப் படைப்புகளில் இழைந்தோடும் இரத்தினச் சுருக்கமான பொன்மொழிகளைத் தொகுத்து, இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு வழங்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டதுண்டு.

ஆயினும் அண்மையில் என் அன்பிற்குரிய அன்னையார் திருமதி நல்லி கண்ணம்மாள் காலமானதும் வாழ்வில் பெற்றோரின் பங்கு, வாழ்க்கையின் இலக்கு, பொருள் - இவற்றைப் பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்த்தேன். துன்பம் சூழ்ந்த வேளையில் பாரதியாரின் வார்த்தைகள் எனக்கு மிகவும் இதமாக இருந்தன.

அப்படி என்னைக் கவர்ந்த - நான் ரசித்த எனக்குத் தெளிவும் உரமும் ஊட்டிய - மணிமொழிகளை இந்த நூலில் தந்துள்ளேன்.

இந்த நூல் தொகுப்பில் உதவிய நண்பர்களுக்கும், இந்த நூலை வெளியிட்டுள்ள ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்ற முத்தான வரிகளுடன் என் முன்னுரையை நிறைவு செய்கிறேன்.

இனி உங்களுடன் பாரதி . . .

அன்புடன்

நல்லி குப்புசாமி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்புரை

'நாட்டு மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தவர் மேனிலை எய்தவும்' பராசக்தியின் அருளை வேண்டி நாளும் உழைத்தவர் மகாகவி பாரதி.

மகாகவி பாரதியின் படைப்பு இலக்கியச் செல்வங்களிலே மண்டிக் கிடக்கும் பொன்மொழிகளில் சிலவற்றை மட்டும் தெரிந்தெடுத்து, அவற்றிற்கு **மகாகவி பாரதியார் மணிமொழிகள்** என்ற பெயரைச் சூட்டி, பிரபல பட்டுத் தொழில் அதிபர் டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்.

பாரதியின் பரந்துபட்ட சீரிய சிந்தனைகள் காலத்தை வென்று நிற்கும் பெற்றி கொண்டவை என்பதை இந்த நூலில் இடம் பெற்றுள்ள "மணிமொழிகள்" நன்கு புலப்படுத்திக் காட்டுகின்றன.

இன்றைய இளைய தலைமுறையினர் படித்துப் பயன்பெறவேண்டும் என்கிற 'ஆசை' காரணமாகத் தொகுக்கப்பட்ட நூலை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்வும் பெருமையும் கொள்கிறோம்.

தாம் மேற்கொண்டுள்ள தொழிலையும் ஏற்றுக் கொண்டுள்ள பொதுநலப் பணிகளையும் கவனிக்கவே நேரம் போதாமல் இருக்க, பாரதிமேல் கொண்ட பக்தி காரணமாகத் தமிழ் இலக்கியத்திற்கு அணி செய்கின்ற வகையிலே நூலை வழங்கிய டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களுக்கு எங்கள் பதிப்பகத்தின் சார்பிலே நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூல் தமிழக மக்களின் நல்லாதரவைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

- பதிப்பகத்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகாகவி பாரதியார்
மணிமொழிகள்

பொருளடக்கம்

பரம்பொருள் வாழ்த்து	9
வேண்டுதல்	9
பிரார்த்தனை	10
பக்தி	11
பக்தி - தெய்வம்	12
தெய்வ பக்தி	13
கோயில்கள்	18
இந்து தர்மம்	19
மதம்	20
சாஸ்திரப் படிப்பு	21
சக்தி	22
தியானமும் யோகமும்	23
பாவ புண்ணியம்	25
தர்மமும் தானமும்	27
சொல்லும் மந்திரமும்	28
புராணங்களும் வேதங்களும்	29
தேசபக்தி	30
பாரத ஜாதி	31
தமிழ்	33
இலக்கியம்	36
கவிதை	37

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்கீதம்	38
அறிவு	41
பெண்கள்	42
பெண் கல்வி	45
தேசீயக் கல்வி	47
கல்விப் பயிற்சி	48
செல்வம்	50
பணம்	52
தொழில்	54
வியாபாரம்	56
தொழிற் கல்வி	57
உழைப்பு	58
நம்பிக்கை	59
முயற்சி	60
உண்மை - சத்தியம்	61
அன்பு	64
லோகோபகாரம்	66
உடல்	67
அச்சம்	69
கவலை	70
பொறுமை	72
இன்பம்	73
காலம்	76
பெற்றோர் கடமை	78
குதம்பம்	79

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரம்பொருள் வாழ்த்து

ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டு பாற்கடல் மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

வேண்டுதல்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரார்த்தனை

- கிழவனுடைய அறிவு முதிர்ச்சியும், நடுவயதிற்குள்ள மனத்திடனும், இளைஞனுடைய உத்சாகமும், குழந்தையின் இருதயமும் - தேவர்களே, எனக்கு எப்போதும் நிலைத்து இருக்கும்படி அருள் செய்க.

- அறிவு வேண்டுகிறேன்; எந்தப் பொருளை நோக்குமிடத்தும், அதன் உண்மைகளை உடனே தெளிந்துகொள்ளும் நல்லறிவு; எங்கும், எப்போதும் அச்சம் இல்லாத வலிய அறிவு.

- மகத்தான அறிவு வேண்டும்; அழியாத நெஞ்சுறுதி வேண்டும். கல்விகள் வேண்டும். கீர்த்திகள் வேண்டும். செல்வங்கள் வேண்டும். சூழ்ந்திருக்கும் ஊரார், தேசத்தார், உலகத்தார்-எல்லாரும் இன்பத்துடன் வாழும்படி நாம் செய்ய வேண்டும். நல்லாசைகள் பெரிது பெரிதாக வைத்துக் கொண்டு இருக்கிறோம்.

இந்த ஆசைகள் நிறைவேற வேண்டுமானால், பலமான அடிப்படை போட்டு மெல்ல மெல்லக் கட்டிக் கொண்டு வரவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பக்தி

கடவுளிடத்தும், அவனுடைய கலைகள் ஆகிய எல்லா ஜீவர்களிடத்தும் தீராத-மாறாத அன்பு செலுத்துதலே பக்தி என்று சொல்லப்படும்.

இந்தப் பக்திதான் முடிவான சாதனம். இதனால் ஈசன் நம்மிடத்தே கருணை பூண்டு நமக்கு மோட்ச சாம்ராஜ்யத்தைக் கொடுப்பான்.

'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' - இதுவே பக்தி.

கடவுளிடத்தில் பக்தி வைத்து, உண்மையாய் பாடுபட்டு, உழைக்கும் பட்சத்தில் நமக்குச் சகல காரியங்களும் சீக்கிரத்தில் கைகூடும்.

பக்தியாவது தெய்வத்தை நம்புதல். குழந்தை தாயை நம்புவது போலவும், பத்தினி கணவனை நம்புவது போலவும், பார்த்த பொருளைக் கண் நம்புவது போலவும், தான் தன்னை நம்புவது போலவும் தெய்வத்தை நம்பவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பக்தி

■ நம்முடைய பக்தியை நாம் செய்கையில் காண்பிக்க வேண்டும்.

■ நம்பிக்கையை உள்ளத்தில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்குப் பக்திதான் சாதனம்.

பக்தியாவது 'ஈசன் நம்மைக் கைவிட மாட்டான்' என்ற உறுதியான நம்பிக்கை.

தெய்வம்

■ தமிழா, தெய்வத்தை நம்பு; பயப்படாதே.

■ தெய்வம் உண்டு என்பதை எப்படி அறிந்தோம்? உலகம் இருப்பதாலே அறிந்தோம். தெய்வம் உயிர்; உலகம் அதன் வடிவம். உலகம் தெய்வந்தான். உலகத்துச் செய்கைகள் எல்லாம் தெய்வத்தின் செய்கைகளே. உலகத்தின் நடைகளிலும் வழிகளிலும் தெய்வத்தை உணரவேண்டும்.

■ கல்லில் மாத்திரம் தெய்வம் இருக்கிறது என்று நம்பி, நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வம் இல்லை என்று நம்பலாமா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வ பக்தி

■ எந்தத் தொழில் செய்து பிழைத்தாலும் தெய்வ பக்தி இருந்தால், இகத்தில் மேன்மையும், பரத்திலே மோட்சமும் உண்டு.

■ தெய்வ பக்திக்கு நல்ல பயன் உண்டு. ஆனால், அதனுடன் விவேகம் சேர்ந்திருக்க வேண்டும்.

விவேகம் இல்லாதவனுடைய தெய்வ பக்திக்கு உறுதி கிடையாது.

தெய்வத்தினிடம் ஒருவன் வரம் கேட்கப் போகையிலே முதலாவது விவேகம் கேட்கவேண்டும்.

விவேகமே இந்த உலகத்தில் எல்லா விதமான செல்வங்களுக்கும் ஆரம்பம்.

விவேகம் இல்லாதவன் குருடன் விவேகத்துடன் சேர்ந்த தெய்வபக்தியே உண்மையானது. அவ்விதமான தெய்வ பக்தியினால் ஒருவன் எடுத்த காரியத்தில் ஜயம் அடையலாம்.

■ தெய்வபக்தியினால் ஜீவதயை உண்டாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வ பக்தி

- விவேகம் இல்லாதவன் கூடத் தெய்வ பக்தி செய்வதனால் அவனுக்கு நன்மை ஏற்படாமல் போய் விடாது. ஆரம்பத்தில் பலவித இடையூறுகள் உண்டாய், அவற்றிலிருந்து கடைசியாக விவேகம் உண்டாகும். பிறகு தெய்வ பக்தி மேன்மையான பயன்களைத் தரும்.

- ஒவ்வொருவனும் தெய்வ பக்தி பண்ணலாம். எல்லோரும் தெய்வ பக்தியாலே மேன்மை பெறுவார்கள். எந்தத் தொழிலும் தெய்வபக்தியால் வெற்றி அடையும்.

- 'தெய்வமே துணை' என்று இருப்போர் ஓயாமல் தொழில் செய்து கொண்டு இருப்பார்கள். தெய்வபக்தி உண்மையானால், பரோபகாரம் அங்கே இருக்கும். பரோபகாரம் இல்லாத இடத்தில், தெய்வபக்தி வேஷத்தைத் தவிர வேறொன்றும் இல்லை.

- 'தீராத தைரியம் இருக்கிறதா - இல்லையா' என்பதைப் பார்க்க வேண்டும். எதற்கும் அஞ்சாத தைரியமே உண்மையான தெய்வ பக்திக்கு இலட்சணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வ பக்தி

■ விதியின் முடிவுகளைத் தெய்வபக்தி வெல்லும். இந்த உலகம் முழுமைக்கும் ஈசனே தலைவன். அவனும் பக்தர்களுக்கு வசப் பட்டவன்.

பக்தன் எது கேட்டாலும் கைகூடும். நம்பு; கேள். ஓயாமல் தொழில் செய்துகொண்டு இரு. பயனுக்கு அவசரப்படாதே. தெய்வம் நிச்சயமாக வரம் கொடுக்கும்.

■ ஒருவன் உண்மையாகவே தெய்வத்தை நம்பினானா - வீணுக்குச் சொல்கிறானா என்பதை அறிய வேண்டுமானால் ஆபத்து வேளையிலே பார்க்க வேண்டும்.

ஆபத்து நேரும்போது நெஞ்சு கலங்காமல் இருப்பவன் ஞானி; பக்தன், முக்தன், மரணத்துக்கு அஞ்சாதவன், தெய்வத்தை உண்மையாகச் சரணம் அடைந்தவன்.

■ மனோ தைரியம் தெய்வ பக்திக்குச் சமமான புண்ணியம்; உண்மையான தெய்வபக்தி இருந்தால், மனோ தைரியம் உண்டாகும். மனோ தைரியம் இருந்தால் உண்மையான தெய்வபக்தி உண்டாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வ பக்தி

■ கல்வி, அறிவு, புகழ், ஆயுள் முதலிய எல்லா மங்களங்களையும் தெய்வத்தினிடம் உண்மையுடன் கேட்டால், அது கொடுக்கும். தெய்வம் கொடுக்கா விட்டாலும் அதை நம்ப வேண்டும். கேட்டவுடன் கொடுப்பது தெய்வத்திற்கு வழக்கம் இல்லை.

பக்தி பக்குவம் அடைந்த பிறகுதான் கேட்ட வரம் உடனே கிடைக்கும். அதுவரை தாமசங்கள் உண்டாகும். இது கர்ம விதி. எனவே, நாம் தெய்வத்திடம் கேட்ட பயன் கைகூடுவதற்கு எத்தனை காலம் ஆன போதிலும் அதைரியப் படாமல், தெய்வ பக்தியையும், அதனால் உண்டாகும் ஊக்கத்தையும் முயற்சியையும் துணையாகக் கொண்டு நடக்கவேண்டும்.

■ கோயிலுக்குப் போனாலும் சரி; போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி; கும்பிடா விட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால், தெய்வம் அருள் புரியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வ பக்தி

■ தெய்வப் பிரசாதத்தை ஒருவன் பக்தியாலும், ஜீவதயையாலும், நேர்மையாலும், உண்மையாலும், இடைவிடாத உழைப்பினாலும் சம்பாதிக்க முடியும்.

■ 'தெய்வமே சரண்' என்று நம்பி எவன் தொழில் செய்கிறானோ, அவன் என்ன தொழில் செய்த போதிலும், அது நிச்சயம் பயன்பெறும். மனிதன் தன் உள்ளத்தைத் தெய்வத்துக்குப் பலியாகக் கொடுத்து விடவேண்டும்.

■ சாதாரண காலங்களில் தைரியத்துடன் இருப்பது சுலபம். ஆபத்து நேரே தலையை நோக்கி வரும்போது "கடவுள் துணை செய்வார்; எனக்குப் பயம் இல்லை" என்று மனதுடன் சொல்வோன் உண்மையான தெய்வ பக்தன். தெய்வபக்தி ஒன்றைத் தவிர, வேறெந்த சக்தியும் மனிதக் குண்டின் முன்னே தைரியம் கொடுக்காது. சீறிவரும் பாம்பை நோக்கி அஞ்சாமல் நகைக்க வல்ல தீரர் கடவுளின் கருணை பெற்றோரே ஆவர். மற்றபடி வேறு எந்த பலமும் அவ்விதமான தைரியத்தைத் தராது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோயில்கள்

- மிருக நிலையிலிருந்து மனிதரைத் தேவ நிலையில் கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்பட்ட தேவப் பள்ளிக்கூடங்களே கோயில்களாம்.

- ஒன்றுகூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து, மனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டுத் தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை அவர்கள் தெரிந்துகொள்ள இடம் உண்டாகும் என்று கருதி முன்னோர்கள் கோயில் வகுத்தார்கள்.

- ஊர் ஒற்றுமை கோவிலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனியாகச் சிலை வைத்துக் கும்பிடுவது குடும்ப ஒற்றுமை உண்டாகும் பொருட்டாக.

- 'கடவுள் எங்கும் இருக்கிறாரே? எல்லாம் கடவுள்தானே? ஊருக்கு நடுவில் ஒரு கோவிலைக் கட்டி, அதில் ஒரு கல்லையோ, செம்பையோ நட்டு, அங்கேதான் எல்லோரும் வந்து கும்பிடவேண்டும்' என்ற நியமம் எதற்காக? என்றால், ஜனங்களுக்குள் ஐக்கியம் ஏற்படுவதற்காக.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்து தர்மம்

இந்துக்களுக்குள்ளே இன்னும் ஜாதி வகுப்புகள் மிகுதிப்பட்டாலும் பெரிதில்லை. அதனால் நாம் தொல்லைப்படுவோமே அன்றி, அழிந்து போய்விட மாட்டோம்.

இந்துக்களுக்குள் இன்னும் வறுமை மிகுதிப்பட்டாலும் பெரிதில்லை. அதனால், தர்ம தேவதையின் கண்கள் புண்படும்; இருந்தாலும் நமக்குச் சர்வநாசம் ஏற்படாது.

இந்து தர்மத்தைக் கவனியாமல், அசிரத்தையாக இருப்போமானால் நமது கூட்டம் நிச்சயமாக அழிந்து போகும்; அதில் சந்தேகம் இல்லை.

இந்து தர்மத்தின் மகிமையை நன்றாக அறிந்தோர் இகலோக வாழ்க்கையில் எத்தனை கொடூரமான கஷ்ட நிஷ்டூரங்கள் நேரிட்டாலும் இந்தத் தர்மத்தைக் கைவிட மாட்டார்கள்.

இந்து தர்மம் பெருமாள் கோயிலைப் போலே; நிற்பது எங்கே நின்றாலும் அத்தனை பேருக்கும் பிரசாதம் உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதம்

■ எல்லா மதங்களும் உண்மைதான்; ஒரு மதமும் முழு உண்மை அன்று. ஆதலால், மதப் பிரிவுகளைக் கருதி மனிதர் பிரிந்து விடக்கூடாது.

எல்லா மதஸ்தரும் ஒரே தெய்வத்தைத் தான் வணங்குகிறார்கள். லௌகிக விஷயங் களைப் போலவே, மத விஷயங் களிலும் ஒப்பு, உடன்பிறப்பு, விடுதலை - மூன்றும் பாராட்ட வேண்டும்.

■ சிவன் என்று சொன்னால்தான் முக்தி; அல்லது விஷ்ணு என்று சொன்னால்தான் முக்தி என்று நினைப்பது மூட பக்தி.

சிவன், அல்லா, விஷ்ணு முதலியன எல்லாம் நாம ரூபங்களைக் கடந்த பரமாத்துமாவுக்கு மனிதர்களால் கொடுக்கப் பட்ட நாமங்கள். ஆதலால், எந்த மார்க்கமும், எந்த பட்சமும் மற்றவர்களால் வெறுக்கத் தக்கது இல்லை என்ற உண்மை ஆரம்பத்தில் நமது தேசத்தில்தான் ஸ்தாபிக்கப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாஸ்திரப் படிப்பு

■ சாஸ்திரம் பெரிது; சாஸ்திரம் வலியது. அஷ்டமா சித்திகளும் சாஸ்திரங்களினால் ஒருவேளை மனிதனுக்கு வசப்படலாம்.

பூர்வ காலத்தில் பலவகைக் கணித சாஸ்திரங்களும், இயற்கை நூல்களும் பாரத நாட்டிலேதான் பிறந்து, பின்பு உலகத்தில் பரவி இருப்பதாகச் சரித்திர ஆராய்ச்சியிலே தெரிகிறது.

102875

■ எவன் சாஸ்திரத்தை நம்புகிறானோ, அவனே தெய்வத்தை நம்புகிறான். உலகத்தின் அனுபவமே தெய்வத்தின் வாக்கு. அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டது சரியான சாஸ்திரம்.

■ எல்லாவிதமான செல்வங்களுக்கும் அறிவுதான் வேர். அறிவு இருந்தால் எதையும் வெல்லலாம்.

சாஸ்திர வலிமையே வலிமை. உலகத்தில் இப்போது அதிகச் செல்வத்துடன் இருக்கும் ஜாதியார் எல்லாம் சாஸ்திர வலிமையாலே செல்வம் பெற்றார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சக்தி

■ ஒவ்வொருவனுக்கும் மூன்றுவித சக்தி வேண்டும் : (1) அறிவு (2) செல்வம் (3) தைரியம்.

■ மனம், வாக்கு, செயல் - மூன்றும் சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளும் புறமும் மாசிலாது செய்யப் பழகவேண்டும்.

பயம், சந்தேகம், சலனம் மூன்றையும் வெறுக்க வேண்டும். இதனால் சக்தி ஏற்படும்.

■ தெளிந்த அறிவும், இடைவிடாத முயற்சியும் இருந்தால் சக்தி உண்டாகும்.

தெளிந்த அறிவு என்பது இரண்டு வகைப்படும் - ஆத்ம ஞானம், லௌகிக ஞானம் என.

ஆத்ம ஞானத்தில் நமது ஜாதி சிறந்தது; லௌகிக ஞானத்தில் நம்மைக் காட்டிலும் வேறு பல தேசத்தார் மேன்மை அடைந்து இருக்கிறார்கள்.

■ விரதம் இழந்தார்க்கு மானம் இல்லை. விரதத்தை நேரே பரிபாலனம் பண்ணினால் சக்தி நிச்சயம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தியானமும் யோகமும்

தெய்வபக்தி உள்ளவர்களாயினும், நாஸ்திகர்களாயினும், எந்த மார்க்கஸ்தர்களாய் இருந்தாலும், ஒரு மார்க்கத்தையும் சேராதவர்களாய் இருந்தாலும் அவர்களுக்குத் தியானம் அவசியம்.

பாரத தேசத்தில் ஒவ்வொருவனுக்கும் தற்காலத்தில் நல்ல தியானம் உணவைக் காட்டிலும் இன்றியமையாதது. சோற்றை விட்டாலும் விடு. ஒரு தனி இடத்தே போய் இருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக்கூடிய சிந்தனைகள், பலம் தரக் கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக் கூடிய சிந்தனைகள் இவற்றால் அறிவை நிரப்பிக் கொண்டு தியானம் செய்வதை ஒருநாளும் தவற விடாதே.

பரிபூரண விருப்பத்துடன் தியானம் செய். சோர்வும் அதைரியமும் விளைவிக்கத்தக்க எண்ணங்களுக்கு இடம் கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல, உனக்குள் இருந்து தெளிந்த அறிவும், தீரத் தன்மையும், சக்தியும் மேன்மேலும் பொங்கி வரும். உனது இஷ்டசித்திகள் எல்லாம் நிறைவேறும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தியானமும் யோகமும்

துணிவு, உள்ளத் தூய்மை, ஏதாவது ஒரு மகத்தான லட்சியத்திலே அறிவை ஆணி கொண்டு அடித்தது போலப் பற்றுறச் செய்து கொள்ளுதல், லாப-நஷ்டங்களிலே சிந்தனை இல்லாமை - இவைதாம் யோகத்தின் ரகசியம்.

மனம் கலங்கிய மாத்திரத்தில் புத்தி கலங்கிப் போய்விடுகிறது. ஆகையால், புத்தியை நம்பி எவனும் மனத்தைக் கலங்க விடாது இருக்கக் கடவன். மனத்தைக் கலங்க விடாமல் பயிற்சி செய்வதே எல்லாவித யோகங்களிலும் சிறந்த யோகம் ஆகும்.

மனம் தவறி ஒரு துன்பக் குழியில் போய் விழும் காலத்தில், புத்தி சும்மா பார்த்துக் கொண்டு நிற்கிறது. ஒரு வேளை புத்தி தடுத்த போதிலும், அதை மனம் கவனிப்பது இல்லை. புத்தியை மீறி உழலும் சக்தி மனத்துக்கு இருக்கிறது.

ஆதலால், மனம் துன்பத்தில் நழுவி விழத் தொடங்கும்போது, அதை உறுதி அல்லது தைரியம் என்ற கடிவாளத்தால் பிடித்து நிறுத்திப் பழகுவதே சரியான யோகப் பயிற்சியாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாவ - புண்ணியம்

மனுஷ்யன் பாபத்தை விட்டால் அமரத் தன்மையை அடையலாம். "பாவத்திற்கு மரணம் சம்பளம்" என்று கிருஸ்துவ வேதம் சொல்லுகிறது. பாபத்தை நீக்கி, மனிதர் மரணத்தை வெல்லக் கூடிய காலம் வரலாம்.

"பாவத்தின் கூலியே மரணம்" என்று கிறிஸ்துவ வேதம் சொல்லுகிறது. துக்கத்தையும் பயத்தையும் இவற்றால் விளையும் மரணத்தையும் ஒருவன் வெல்ல விரும்பு வானாயின், இங்கு பயங்களுக்கும், துக்கங் களுக்கும் முக்கிய ஏதுவாக இருக்கும் பாவங் களை விட்டுவிட வேண்டும்.

யாதேனும் ஒரு பாவத்தை வெல்லும் முயற்சியில் ஒரு மனிதன் மிகவும் கஷ்டப் பட்டுக் கைதேறி விடுவானாயின், பிறகு மற்ற பாவங்களை வெல்லுவதில் அவனுக்கு அத்தனை கஷ்டம் இராது.

சோம்பேறியாக ஒருவன் நிறையப் பணத்தைக் குவித்து வைத்துக் கொண்டு அக்கம் பக்கத்து ஜனங்கள் பட்டினி கிடந்து சாவதைப் பார்த்துக் கொண்டு இருப்பது மிகவும் கொடிய பாவம்.

2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாவ - புண்ணியம்

■ தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பம் விளைவிக்கத் தக்க செய்கை பாவம்; தனக்கேனும் பிறர்க்கேனும் இன்பம் விளைவிக்கத் தக்க செயல் புண்ணியச் செயல் எனப்படும்.

■ மனிதன் செய்யும் அநியாயங்களில் மாமிச போஜனமே மிகவும் இழிவான அநியாயம். மனிதன் செய்யக் கூடிய பாவங்கள் அனைத்திலும் இதுவே கொடிய பாவம்.

■ புண்ணியமாவது தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பக் கலப்பு இல்லாத சுத்தமான இன்பம் விளைவித்தற்கு உரிய செய்கை என்பது சாஸ்திரக் கோடிகளின் பரம சித்தாந்தம்.

எல்லாம் ஆத்மா; எல்லாம் கடவுள்; ஆதலால், எல்லாம் தான் என்ற ஞானத்தால் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் குணம் நீங்கிவிடும். அதாவது, பாவம் போய் விடும்.

நியாயம் புண்ணியம்; அநியாயம் பாவம். ஹிதம் புண்ணியம்; அஹிதம் பாவம். சத்தியம் புண்ணியம்; அசத்தியம் பாவம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தர்மமும் தானமும்

- ஜீவகாருண்யமே எல்லாத் தருமங்களிலும் மேலானது.

- தர்மம் உள்ள இடத்தில் வறுமை கிடையாது.

- தர்மம் பட்சபாதம் அற்றது; குருட்டு அன்பு இல்லாதது. ஆனால், அருளும் விவேகமும் கலந்து வார்க்கப்பட்ட விக்கிரகம் தர்மம்.

- தர்மங்கள் எல்லாருக்கும் ஒரே விதமானவை அல்ல.

ஒரு மனிதனுக்கே எல்லாக் காலங்களிலும் தர்மங்கள் ஒரே விதமானவை அல்ல. காலத் திற்கும் இடத்திற்கும் மனிதனுக்கும் அவசரத்துக்கும் ஏற்றபடி தர்மங்கள் வித்தியாசப்படுகின்றன.

அந்த தர்மங்களைச் சரியானபடி பரிபாலனம் செய்தாலே உலக வாழ்க்கையைப் பயன்படத்தக்கதாகவும், தெய்வத்துக்குத் திருப்தி தரத் தக்கதாகவும் செய்யலாம்.

- செல்வம் உடையோர்கள் தங்கள் திரவியத்தைத் தாம் உசிதமாக அனுபவித்து மிகுதியை ஈசுவரார்ப்பணம் செய்யவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லும் மந்திரமும்

■ வெறும் "சொல்"லுக்கு மகிமை இல்லை. அச் சொல் உள்ளத் துணிவை உணர்த்துமாயின், அதற்கு மகிமை உண்டு.

■ உள்ளத்தின் அடியிலிருந்து வெளிப்படுகிற வேண்டுதலுக்கு "மந்திரம்" என்று பெயர். அது பலிக்கும். ஆனால், அங்கிருந்து பிரார்த்தனை கொண்டு வருதல் எளிது அன்று. அது பெரிய ஆழம். உள்ளத்தின் அடி!

■ மனத்தைக் கட்டி ஆளுவதற்கு மந்திரத்தை உச்சரிப்பதே வழி. மந்திரத்தின் ஒலியைத் தியானம் செய்வதில் பயன் கிடைக்கும் என்று தோன்றவில்லை. அதன் பொருளைத் தியானிக்கவேண்டும்.

■ 'வாக்கு' என்பது மூலத்திலே, படைத்தல் என்று பொருள்படும். சரஸ்வதியை இந்திரனுடைய மறை உயிர் என்று சொல்வது உண்டு. சிருஷ்டியே வாக்கு; சிருஷ்டியே சக்தியானபடியாலேதான் புராணக்காரர் சரஸ்வதியைப் பிரம்மாவின் சக்தி என்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புராணங்களும் வேதங்களும்

■ வேதக் கொள்கைகளை எல்லா ஜனங்களுக்கும் தெளிவாக உணர்த்தும் பொருட்டு முன்னோர்களால் புராணங்கள் ஏற்படுத்தப் பட்டன.

■ புராணங்கள் முழுதும் சரித்திரம் அல்ல; ஞான நூல்கள்; யோக சாஸ்திரத்தின் தத்துவங்களைக் கவிதை வழியிலே கற்பனைத் திருஷ்டாந்தங்களுடன் எடுத்துக்கூறுவன.

இவையன்றி நீதி சாஸ்திரத்தை விளக்கும் படியான கதைகளும், அந் நூல்களில் மிகுதியாகச் சேர்ந்திருக்கின்றன. சரித்திரப் பகுதிகளும் பல உண்டு. இவ்வாறு பல அமிசங்கள் சேர்ந்து ஆத்ம ஞானத்துக்கு வழி காட்டி, தர்ம நீதிகளை மிகவும் நன்றாகத் தெரிவிப்பதால், அந்த நூல்களை நாம் மதிப்புடன் போற்றி வருதல் தகும்.

■ வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயன் அடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள்போல் நடந்துகொள்ளாதே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேச பக்தி

■ துருவன், பிரகலாதன் முதலியோர் விஷ்ணுவிடத்தில் செலுத்திய பக்தியை நாம் சுதேசத்தினிடத்திலே செலுத்த வேண்டும்.

■ தேசாபிமானம் கற்பியாத கல்வி முறை வெறும் மண்ணாகுமே யன்றி, ஒன்றுக்கும் பயன்படாது.

■ உபாத்தியாயர்கள் மாணாக்கர்களுக்கு ஆண் தன்மை அளிக்கும் கல்வியையும், தேச பக்தியை உண்டாக்கும் கல்வியையும் கற்பிக்க வேண்டியது அவசியம். அப்படி இன்றி வெறும் பாடத்தை மட்டில் உபாத்தியாயர்கள் உருவேற்ற வைத்தால், மாணாக்கர்கள் வெறும் கிராமோபோனுகளே ஆவர். ஆகையால் புருஷனாக்கும் கல்விதான் அவசியமானது.

■ தேசபக்தி என்பது நம்மவருக்கு அன்னியரால் நேரும் தீமைகளை மாத்திரம் ஒழிக்கும் இயல்பு உடையது அன்று. நமக்கு நாமே செய்துகொள்ளும் அநீதிகளையும் நீக்கும் இயல்பு உடையது.

■ நமது ஜாதிய ஒருமையை உணர்வதற்குத் தேசபக்தி என்ற விழி கொண்டு பார்க்கவேண்டும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத ஜாதி

■ இந்தியாவில் பிறந்தவன் இந்திய ஜாதி அல்லது ஹிந்து ஜாதி.

■ கங்கையிலே வந்துசேரும் வாய்க்கால்கள் எல்லாம் கங்கையாகவே மாறிவிடும்.

பாரத தேசத்தில் வந்து குடியேறித் தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்பவர்கள் எல்லாம் நமது ஜனக் கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றனர்.

கிருஸ்துவர்களாயினும், பார்சிகளாயினும், மகம்மதியராயினும், எங்கிருந்து வந்து எந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும், பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களை எல்லாம் பாரத ஜாதியிலே சேர்த்துக் கணக்கிட வேண்டும். இது ஒரே ஜாதி; பிரிக்க முடியாதது; அழிவு இல்லாதது.

■ பாரத பூமியின் மக்கள் எல்லாம் ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மத பேதம், ஜாதி பேதம், குல பேதம், பாஷை பேதம் ஒன்றுமே கிடையாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத ஜாதி

■ இந்துக்களாகிய நாம் எல்லோரும் ஒரே கூட்டம்; ஒரே மதம்; ஒரே ஜாதி; ஒரே குலம்; ஒரே குடும்பம்; ஒரே உயிர்.

■ ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டில் உள்ள முப்பதுகோடி ஜனங்களும் ஒரு ஜாதி.

வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது

வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்தாலே உயர்வு - தாழ்வு என்ற எண்ணம் கூடாது.

மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது.

■ இந்துமதத்தை உண்மையாக நம்புவோர் எல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே உடம்பு, ஒரே ரத்தம், ஒரே சுடர், ஒன்று.

■ எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்

தமிழ், தமிழ், தமிழ் - என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால், புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் - தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.

தமிழ் வளர்ந்தால் தர்மம் வளரும்.

தமிழ்நாட்டில் உண்மையான கல்வி பரவவேண்டுமானால், சகல சாஸ்திரங்களும் தமிழ்ப் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோர் எல்லோரும் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இதை அனுசரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை.

சபைகள், சங்கங்கள், பொதுக் கூட்டங்கள், வருஷோத்சவங்கள், பழம் சுவடிகள் சேர்த்து வைத்தல், அவற்றை அச்சிடல் - இவை எல்லாம் பாஷை வளர்ச்சிக்கு நல்ல கருவிகள் என்பதில் சந்தேகம் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்

- தமிழ்ப் பாஷையை வெறும் காவியாதிகளுக்கு மட்டுமே உரிய பாஷையாக்கினால், அது நாளுக்கு நாள் வளர்ச்சி பெற இடமில்லை; சாஸ்திரீய நூல்களும், சாஸ்திரீய வழக்குகளும், அந்த நடையும், அவ்வகைப்பட்ட சித்த விருத்தியும் நமது பாஷையிலே அதிகப்படும்படி செய்வது நம்மவருள்ளே கற்றோர்களின் கடமை.

- தமிழைப் போல் வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமே இல்லை.

- இங்கிலீஷ் படித்த தமிழ்மக்கள் முக்கியமாக - வக்கீல்களும், பள்ளிக்கூடத்து வாத்தியார்களும் தமது வாக்கிலும் மனத்திலும் தமிழரசியைக் கொலு இருக்கும்படி செய்து வணங்க வேண்டும்.

- இங்கிலீஷ் படித்த வக்கீல்களும், இங்கிலீஷ் பள்ளிக்கூடத்து வாத்தியார்களும் தமது நீதி ஸ்தலங்களையும், பள்ளிக்கூடங்களையும் விட்டு வெளியேறிய உடனே, இங்கிலீஷ் பேச்சை விட்டுத் தாம் தமிழர் என்பதை அறிந்து நடக்கவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்

தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகள் எல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்திலே ஒருவன் தமிழ் அபிமானி ஆக மாட்டான். பள்ளிக்கூடத்து சாஸ்திரங்கள் எல்லாம் தமிழ்ப் பாஷையில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழ் அபிமானி.

தமிழராகப் பிறந்தோர் கூடி இருக்கும் சபைகளிலேயும், தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கு ஒருவர் பேசும் போதும் இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழ் அபிமானி.தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர் தோன்றும்படி செய்வோன் தமிழ் அபிமானி.

தமிழில் அபிமானம் உள்ளவன் இந்து தர்மத்தைக் கைக்கொண்டு நிற்பவன். அதுவே, தமிழ் அபிமானியைச் சோதிக்கும் வழி. ஏனென்றால், தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருவாய் மொழியிலும், திருக்குறளிலும், கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழ் அபிமானம் உண்மையிலே பிறக்க நியாயம் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியம்

ஒரு தேசத்தின் நாகரிகம் அல்லது அறிவு முதிர்ச்சி இன்ன தன்மை உடையது என்று கண்டுபிடிக்க வேண்டுமாயின், அதைக் கண்ணாடி போல் விளக்கிக் காட்டுவது இந்த நாட்டில் வழங்கும் பாஷையில் உள்ள இலக்கியம் அல்லது காவியம் முதலிய நூல்களே யாம்.

இலக்கியத்துக்குத் தெளிவும் உண்மையுமே உயிர் எனலாம். இவ் வுயிருடைய வாக்கே அருள்வாக்கு என்று சொல்லப்படும்.

'கொல்லைப் பச்சிலை'யின் அருமையை நோயாளிகள் எளிதில் அறிந்துகொள்வது வழக்கம் இல்லை. அதுபோலவே, நமக்குள் வெகு சகஜமாய் இருக்கும் சில் நூல்கள் நமக்கு அளவற்ற பயன் தரக்கூடியனவாக இருந்தும், நாம் அவற்றை ஆழ்ந்து படித்து யோசனை செய்து, அந்த யோசனைப்படி நடத்தாமல் இருப்பதால், அந் நூல்கள், நம் நாட்டில் தரையின் கீழ்ச் செறிந்து கிடக்கும் உலோகங்களைப் போல, நமக்குப் பிரயோஜனம் இல்லாமல் ஒளி இழந்து கிடக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதை

உண்மையான கவிதை அருமையான திரவியம். அதனால் உலகம் க்ஷேமத்தை அடைகிறது. எந்த நாட்டிலே புதிய மகாகவி தோன்றுகிறானோ, அந்த நாடு மகா பாக்கியம் உடையது.

பல பல பதங்களை அடுக்கி, ஏடுகளைப் பெருக்குவது சிறந்த கவிதை அன்று. கேட்பவன் உள்ளத்திலே கவிதை உணர்வை எழுப்பி விடுவது சிறந்த கவிதை.

அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை.

விடாமுயற்சியும், தெய்வ பக்தியும், அறிவிலே விடுதலையும் ஏறினால், கவிதையிலே வலிமை ஏறும்.

கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை - மூன்றும் இருக்க வேண்டும்.

கவித்திறமை இருப்பதற்குப் பாண்டித்தியம் ஒருவாறு அவசியம் என்றாலும், பாண்டித்தியம் இருப்போர்க்கு எல்லாம் கவிதா சக்தி இருப்பது இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்கீதம்

■ பாரததேசத்து சங்கீதம் பூமியில் உள்ள எல்லா தேசத்து சங்கீதத்தைக் காட்டிலும் மேலானது.

கவிதையைப் போலவே சங்கீதத்திலும் நவரசங்களின் தொழில் இருக்கவேண்டும்.

■ இங்குள்ள ஜந்துக்களிலே மனிதருக்கும் பறவைகளுக்கும் பாடத் தெரியும்.

மற்ற மிருகங்களுக்குப் பாட்டு வராது.

பறவைகள் வானத்திலே பறக்கும் வழக்கம் இருப்பதால், அவற்றின் மனநிலை சங்கீதத்திற்கு இசைகின்றது போலும்!

மனிதன் உடம்பினாலே பறக்கா விட்டாலும், உள்ளத்தைத் திசை வெளியிலே பறக்கும்படி செய்கிறான். அப்போது இயற்கையிலே பாட்டுத் தோன்றுகிறது.

■ பாட்டுப் பாட விரும்புவோர் நல்ல பாட்டில் பழக வேண்டும்.

பாட்டுக் கேட்க விரும்புவோர் நல்ல பாட்டுக் கேட்க வழி தேட வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்கீதம்

பாட்டினால் மகிழ்ச்சி உண்டாகிறது; லக்ஷ்மீ கடாட்சம் ஏற்படுகிறது; உபசாந்தி பிறக்கிறது.

வித்துவான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணி புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால், தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுகளை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயம் இல்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்.

ரச ஞானம் இல்லாதபடி பல்லவிகளும், கீர்த்தனங்களும் பாடுவோர் சங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்துச் சங்கீத வித்துவான்களிலே பலர் "சங்கீதத்திற்கு நவரசங்களே உயிர்" என்பதை அறியாதவர்.

பூர்விக மகான்களுடைய பாட்டுகளை அர்த்தத்துடன் பாட வேண்டும். பதங்களைப் பிழையாக உச்சரிக்கக் கூடாது. பதங்களை வாய்விட்டுத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்கீதம்

'பாட்டுக்குத் தாளமே ஒழியத் தாளத்திற்குப் பாட்டு இல்லை' என்ற விஷயத்தைப் பாடுவோர் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும்.

'பாட்டுக் கச்சேரி' என்று பெயர் வைத்துக் கொண்டு அங்கே இசை இன்பங்களைக் கொன்று, தாள முழக்கத்தைப் பிரதானம் ஆக்குதல் தகாது. அதிலும் கீர்த்தனங்களைப் பாடும்போது இசை இன்பங்களைக் காட்டுதல் முதல் காரியமாகவும், தாளத்தை உபகரணமாகவும் கொள்ள வேண்டும்.

ஆணாயினும் பெண்ணாயினும் கள்ளத் தொண்டை வைத்துக் கொண்டு பாடலாகாது. தொண்டையைத் திறந்து பாடினால்தான் சுகம் உண்டாகும்.

இயற்கையிலே ஆணுக்குக் கனமான குரலும் பெண்ணுக்குச் சன்னமான குரலும் ஏற்பட்டு இருக்கின்றன.

தொண்டையைத் திறந்து தெளிவாகப் பாடுவதிலே லஜ்ஜைப்பட யாதொரு நியாயமும் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறிவு

■ எல்லாவிதமான செல்வங்களுக்கும் அறிவுதான் வேர். அறிவு இருந்தால் எதையும் வெல்லலாம்.

■ அறிவுதான் ராஜா. மனமும் இந்திரியங்களும் உடம்பும் அறிவுக்கு அடங்கி வாழ வேண்டும். இல்லாவிட்டால் அவற்றுக்கே கெடுதி உண்டாகும்.

■ மகான்கள் கவிகளாயினும், சாஸ்திரக்காரராயினும், வேறு எவ்வகையிலே தேசத்துக்கு உபகாரம் செய்து இருந்த போதிலும், அவருடைய ஜன்ம தினத்தைக் கொண்டாடி, சபைகள் நடத்தி, ஆராய்ச்சிகள் செய்வது தேசத்தின் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணை ஆகும்.

■ அறிவின் வலிமையே வலிமை. அறிவினால் உயர்ந்தோர்களை மற்றோர் இழிவாக நினைப்பதும், அடிமைகளாக நடத்துவதும் சாத்தியப்பட மாட்டா. அறிவின் மேன்மையால், வெளித் தேசங்களிலே உயர்ந்த கீர்த்தி படைத்து மீள்வோரை, அதன்பிறகு இந்தத் தேசத்தார் கட்டாயம் போற்றுவார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்கள்

- ஒவ்வொரு நாட்டின் மேன்மையோ - தாழ்மையோ அந் நாட்டு மாதர்களைப் பொறுத்து இருக்கின்றது.
- பெண் உயராவிட்டால் ஆண் உயராது.
- பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை "வாழ்க்கைத் துணை" என்றார்கள். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.
- பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான். பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான்.
- ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகாது. அனுஷ்டானத்திற்கு வராத ஞானத்தை ஞானம் என்று சொல்வதே பிழை. ஆகவே பூமி முழுமைக்கும் பெருந்துணையாக நின்று மனுஷ்ய ஜாதியைக் காப்பாற்றக் கூடிய இந்து மதத்தின் சார உண்மைகளை நாம் ஒழுக்கத்திலே காண்பிக்க வேண்டும்.

இங்ஙனம் காண்பிக்கும்படி நம்மவரைத் தூண்டி வழி காட்டும் கடமையும் தகுதியும் நம்முடைய மாதர்களுக்கே உரியன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்கள்

■ பெண்ணைத் தாழ்வாகவும், ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டு இருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கு எல்லாம் அஸ்திவாரம்; அநீதிகளுக்கு எல்லாம் கோட்டை; கலி யுகத்திற்குப் பிறப்பிடம்.

■ தமிழ்க் கல்விக்கும், தமிழ்க் கலைகளுக்கும், தொழில்களுக்கும் தமிழ் ஸ்திரீக்ளே விளக்குகளாவர். தமிழ்க் கோயில், தமிழரசு, தமிழ்க் கவிதை, தமிழ்த் தொழில் முதலிய வற்றுக்கு எல்லாம் துணையாகவும் தூண்டுதலாகவும் நிற்பது தமிழ் மாதர் அன்றோ?

■ விதவா விவாகம் செய்யத்தக்கது. ஆண்களும் பெண்களும் ஒருங்கே யமனுக்குக் கீழ்ப்பட்டு இருக்கிறார்கள்.

ஆதலால், ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாய், ஆண்களுக்குப் பெண்கள் அஞ்சி ஜீவன் உள்ள வரை வருந்தி வருந்தி மடிய வேண்டிய அவசியம் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்கள்

- ஸ்திரீகள் தமக்கு இஷ்டமான பேரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்துகொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமை இல்லை; உயிர்த் துணை; வாழ்க்கைக்கு ஊன்றுகோல்; ஜீவனிலே ஒரு பகுதி.

- மனைவி தான் கணவனுக்குத் துணைவி என்பதை மறந்து, அவனுக்கு அடிமை என்றாவது, அவன் தாய் - தகப்பன் முதலியோருக்குத் தொண்டச்சி என்றாவது நினைத்துவிடக் கூடாது.

  தனது அறிவினாலும், நடையினாலும் தன்னை அன்னியர் மதிப்பின்றி நடத்தாதவாறு செய்து கொள்ள வேண்டும்.

- மாதர்கள் உதவி இன்றி ஒரு தேசமும் எவ்விதமான அபிவிருத்தியும் அடைய முடியாது. ஈசுவரனுக்கே தேவிதான் சக்தி என்று மதவாதிகள் சொல்லும் உண்மைப் பொருளை மறந்துவிடக் கூடாது. சக்தியாகிய தேவி இல்லாத விஷயத்தில் புருஷன் ஒன்றும் செய்ய முடியாது என்பது மத விவகாரங்களில் மாத்திரம் அன்று, எல்லா விவகாரங்களிலும் உண்மையே ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண் கல்வி

■ குடும்ப வழக்கங்கள் ஆயினும், தேச வழக்கங்கள் ஆயினும், ஜாதி வழக்கங்கள் ஆயினும் அவற்றுள் முக்கியத் தன்மை உடையன எவை, இல்லாதன எவை என்ற ஞானம் நம்முடைய ஸ்திரீகளுக்கு ஏற்பட வேண்டுமாயின், அதற்குக் கல்வியைத் தவிர வேறு சாதனம் இல்லை.

■ தேசத்தின் 'சக்தி ரூபங்'களாகிய மாதர்களை அறிவு இன்மை என்னும் பேரிருளில் ஆழ்த்தி வைத்து விட்டுத் 'தேசாபிவிருத்தி', 'தேசாபிவிருத்தி' என்று கூக்குரலிடுவோரின் பேதைமையை என்னென்று உரைப்போம்!

■ நமது தேசத்தின் 'ஆதார சக்தி'களாகிய மாதர்களின் இருதயமும், அவர்களது ஆன்மாவும் இருள் அடைந்து போவதைக் காட்டிலும் பாதகச் செயல் வேறு இல்லை.

ஞான கிரணங்கள் அவர்களது ஆன்மாவில் தாக்குமாறு செய்தால் அன்றி, நமக்கு வேறு விமோசனம் கிடையாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண் கல்வி

- அறிவின் வளர்ச்சியினால் பெண்மைக்குச் சிறப்பு உண்டாகும். பெண்மை பெருமையுடன் கலந்த இடத்து அந் நாடு சிறப்பு அடைவது ஆகும்.

- மகான்கள் பிறந்து வாழ்ந்த நாட்டிலே மண்ணுண்ணிப் பூச்சிகள் நடமாடுவதைக் கண்டு, ஒவ்வொரு ஸ்திரீயும் மனம் புழுங்க வேண்டும்.

  தத்தம் மக்களுக்கு அறிவு, உயர் குணம், சரீர திடமை, மனோ தைரியம், ஆண்மை முதலியவற்றைக் கற்பித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

- பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம் பேதைமை அற்றிடும் காணீர்.

- ஔவையார் பிறந்து வாழ்ந்த தமிழ்நாட்டு மாதருக்கு அறிவுப் பயிற்சி கஷ்டம் ஆகுமா?

  சற்றே ஊன்றிப் பாடுபடுவார்களாயின் தமிழ் மாதர் அறிவுப் பயிற்சிகளிலே நிகரற்ற சக்தி படைத்து விடுவார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசீயக் கல்வி

■ தேசத்தின் வாழ்வுக்கும் மேன்மைக்கும் தேசீயக் கல்வி இன்றியமையாதது. தேசீயக் கல்வி கற்றுக் கொடுக்காத தேசத்தைத் தேசம் என்று சொல்லுதல் தகாது. அது மனிதப் பிசாசுகள் கூடி வாழும் விஸ்தாரமான சுடுகாடே ஆகும்.

■ தேச பாஷையின் மூலமாகப் பயிற்றப் படாத கல்விக்குத் தேசீயக் கல்வி என்ற பெயர் சொல்லுதல் சிறிதளவும் பொருந்தாது.

■ தேசீயப் பள்ளிக்கூடத்து மாணாக்கர் களுக்கு உபாத்தியாயர் தத்தம் இஷ்ட தெய்வங்களினிடம் பரமபக்தி செலுத்தி வழிபாடு செய்து வரவேண்டும் என்று கற்பிப்பதுடன், இதர தெய்வங்களைப் பழித்தல், பகைத்தல் என்ற மூடச் செயல் களைக் கட்டோடு விட்டுவிடும்படி போதிக்க வேண்டும்.

"கடவுள் ஒருவரே; அவரை ரிஷிகள் பல பெயர்களால் அழைக்கின்றனர்" என்ற ரிக் வேத உண்மையை மாணாக்கரின் உள்ளத்தில் ஆழப் பதியுமாறு செய்யவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்விப் பயிற்சி

■ ஒரு நாட்டில் உள்ள எல்லாவிதமான குறைகளுக்கும் புத்திக்குறையே ஆதாரம். இது படிப்புக் குறைவினால் உண்டாவது. இந்தக் குறையை நீக்குவதில் நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் மிகவும் அவசியம்.

■ செட்டுக் குடித்தனம், ஆனால் - திருந்திய ஜீவனம் நமது ஜனங்களுக்கு அவசியம் . . . நல்ல காற்று, நல்ல நீர், சுத்தமான - பயனுடைய - ருசியான - தகுந்த அளவுள்ள ஆகாரம், சுத்தமான உடை - இவை எல்லாம் திருந்திய ஜீவனத்திற்கு லட்சணங்கள் . . . ஜனகோடிகள் படித்தால் ஒழிய நாகரிகப் படுவதற்கு வேறு வழி இல்லை.

■ எல்லா வகுப்பு மக்களுக்கும் சரியானபடி படிப்புச் சொல்லிக் கொடுத்தால் எல்லோரும் சமான அறிவுடையோராய் விடுவார்கள்.

■ எல்லா ஜனங்களுக்கும் எழுத்து, படிப்பு, இலக்கமிடுதல் - என்ற மூன்றும் அவசியமாகத் தெரிந்து இருக்கவேண்டும். அதற்குமேல் சிறிது பூகோள சாஸ்திரம், சிறிது சுதேச சரித்திரம், சரீர சுகவழி என்பவையும் கற்றல் நலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்விப் பயிற்சி

■ எல்லா வகுப்புகளையும் சேர்ந்த எல்லா மனிதரிடையேயும் கல்வியும் அதன் விளைவுகளாகிய பல வகைப்பட்ட அறிவுப் பயிற்சிகளும் பரவி விடுமானால், அதனின்றும் கைத் தொழிலாளிகள் கல்விப் பயனைக் காவியங்கள் இயற்றுவதிலும், படிப்பதிலும் மாத்திரமே செலவிடும் வழக்கம் மாறிப்போய், அவரவர் தத்தமக்கு உரிய தொழில்களிலும் கல்வி அறிவைப் பயன்படுத்தத் தொடங்குவார்கள். இதனின்றும், இதுவரை உலகத்தில் கைத் தொழிலாளர் பரம ஏழைகளாக இருந்து வரும் நிலைமை நீங்கி, மேன்மேலும் கைத் தொழிலாளருக்குள்ளே செல்வம் வளர்ச்சி பெற்றுவர ஏது உண்டாகும்.

■ படிப்பு எல்லா மதங்களுக்கும் பொது. எல்லா தேசங்களுக்கும் பொது. எல்லா ஜாதிகளுக்கும் பொது . . . எல்லா ஜாதியிலும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகுதிப் பட்டால், அனாவசியப் பிரிவுகள் நிச்சயமாகக் குறைவுபடும்.

■ அறிவே வலிமை. கல்வியே செல்வத்தின் தாய்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செல்வம்

- சேர்க்கப்படுவது செல்வம். மனிதனுக்கு இன்பம் தரும் பண்டங்களையும் அவற்றைக் கொள்வதற்கு நல்ல கருவியாகிய பொன்னையும் சேகரித்து வைக்கவேண்டும். இடைவிடாமல் சேர்க்கவேண்டும்.

- செல்வம் இனிது. அது முயற்சியினால் சேர்க்கப்படுவது. பயனுள்ள தொழிலை மேன்மேலும் ஊக்கத்துடனும் அறிவுடனும் செய்வதால் பொருள் பெருகும்.

- செல்வம் உணவைப் போன்றது. புதிதாக அதைத் தேடி உழைப்போர்க்கு அது நன்மையையும், க்ஷேமத்தையும் உண்டாக்கும்.

- மனிதன் செல்வம் தேடுவதற்குப் பல உபாயங்கள் செய்வது நியாயம் தான். ஆனால் அவனவன் தகுதிக்குரிய வழிகளிலே செல்ல வேண்டும். ஒரு முயற்சியைக் கைக்கொண்டால் பிறகு வெற்றி உண்டாகும் வரை எப்போதும் அதிலேயே கண்ணும் கருத்துமாகப் பாடுபட வேண்டும். பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்ட மாட்டான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செல்வம்

செல்வம் என்ன பயனைத் தரும்? நோவு இன்றிக் காக்குமோ? அன்று. நோவுகளை விளைக்கும். பகையின்றிக் காக்குமோ? அன்று. பகையைப் பெருக்கும். கவலைகளும் அச்சங்களும் இன்றிக் காக்குமா? அன்று. அவற்றை மிகுதிப்படுத்தும். மரணமின்றிக் காக்குமா? காக்காது. எனில், அதனை வேண்டி அழுங்குதல் பெரும் பேதைமை அன்றோ?

02875

உலகத்தில் ஒரு நாடானது செல்வத்திலும், நீதி உணர்ச்சியிலும், ராஜரீகத்திலும் ஜன சமூக ஒழுங்குகளிலும் தேற வேண்டுமானால், அந் நாட்டுச் சிறுவர்கள் அனைவர்களும் பணம் சம்பாதித்துத் தரக்கூடிய படிப்பையே படிக்கவேண்டும். ஏனென்றால், எக் காலத்திலும் உலகத்தில் செல்வந்தான் அதிக பலமுடையதாய் இருக்கிறது.

புத்தி மாத்திரம் இருந்தால் போதாது. அதைக் கொண்டு சோம்பல் இல்லாமல் விடா முயற்சியுடன் உழைக்கவும் வேண்டும். அப்போதுதான் செல்வம் சேர இடம் உண்டாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பணம்

பொதுவாக, எல்லா தேசங்களிலும் அநேக நற்காரியங்கள் பணம் இல்லாமல் முறிந்து போவது வழக்கம்.

அதிலும் நமது தேசம் உலக முழுவதிலும் உள்ள நாடுகளைக் காட்டிலும் . . . அதிக ஏழைமை கொண்டு இருப்பதால், இங்கே பணம் இல்லாமல் உடைந்து போன காரியங்களுக்கு அளவு இல்லை.

மணிலாக் கொட்டை (நிலக்கடலை)யும், பருத்தியும், அவுரியும் ஆகாரம் ஆகமாட்டாது. பணம் எப்போதும் அரிசிக்கு நிகர் ஆக மாட்டாது. கையில் பணம் சேர வேண்டும் என்ற ஒரே கருத்துடன் நிலத்திலே உணவுத் தானியங்கள் அல்லாத பிறவற்றைப் பயிரிடுபவர்கள் நீடித்த யோசனை இல்லாதவர்கள். உணவுப் பொருள்களின் விலை அதிகப்பட அதிகப்பட உன் பணத்துக்கு விலை குறைவுதானே!

மனித ஜாதிக்குத் தீராத நோய் ஒன்று பீடித்து இருக்கிறது. மாறாத சாபம்; இறங்காத விஷம். இதன் பெயர் பணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பணம்

இந்தியாவில் விசேஷக் கஷ்டங்கள் இரண்டு. பணம் இல்லாதது ஒன்று; ஜாதிக் குழப்பம் இரண்டாவது.

பணக் கஷ்டமாவது, வயிற்றுக்குப் போதிய ஆகாரம் இல்லாத கொடுமை. இந்தத் துன்பத்துக்கு முக்கியமான நிவர்த்தி யாதென்றால், நமது தேசத்தில் விளைந்து, உணவுக்குப் பயன்படக் கூடிய தானியங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகாமல் தடுத்து விட வேண்டும்.

உணவுத் தானியங்களின் ஏற்றுமதியை எந்த நிமிஷத்தில் நிறுத்தி விடுகிறோமோ, அந்த நிமிஷம் முதல் நம்முடைய ஜனங் களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் யதேஷ்ட மான ஆகாரம் கிடைத்துக் கொண்டு வரும்.

மனித ஜாதியைக் கவர்ந்து இருக்கும் தெய்விகமாகிய அன்பு எனும் வலையை அறுத்து எறியும் நீசத் தன்மை கொண்ட எலி ஒன்று இருக்கிறது. இதன் பெயர் பணம். இப் பேய்க்கு வணங்கும்படி அவனைத் தூண்டி விடுவது விருப்பம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொழில்

தொழில் செய்வதில் வலிமை செலுத்த வேண்டும். ஒருவனது முழுவலிமையையும் செலுத்திச் செய்யப்படும் தொழிலே தொழிலாம்.

ஆனால், எவ்வளவு தொழில் செய்த போதிலும், அதை எத்தனை வலிமையுடன் செய்த போதிலும் அதனால் உடம்புக்குச் சிரமம் உண்டாகாதவண்ணமாகச் செய்ய வேண்டும்.

'கஸ்ரத்' செய்யும் தொழிலாயினும், கதை எழுதும் தொழிலாயினும் - எல்லாவிதமான தொழிலுக்கும் தத்துவம் ஒன்றேயாம். அதாவது, மனதில் சிரமம் தோன்றின பிறகு தான் உடம்பில் சிரமம் தோன்றுகிறது. அசைக்க முடியாத பொறுமையுடன் தொழில் செய்தால் தொழில் சிரமமும் தோன்றாது; அது உன்னதமான வெற்றி பெறவும் செய்யும்.

இங்ஙனம் தொழில் செய்தால் மேன்மேலும் புதிய இரத்தம் பெருகி உடம்பில் மேன்மேலும் ஒளியும் வலிவும் விருத்தி அடைந்துகொண்டு வரும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொழில்

■ தேசத்துப் பிறந்த சர்வ ஜனங்களுக்கும் தேசத்துச் செல்வம் பொது என்பது உண்மையாய் விடின், ஏழைகள் செல்வர் என்ற வேற்றுமையினால் உண்டாகும் தீமைகள் இல்லாமல் போகும்படி சகலரும் தொழில் செய்துதான் ஜீவிக்க வேண்டும் என்ற விதி வழங்குமானால், தேசத்துத் தொழில் மிகவும் அபிவிருத்தி அடைந்து ஜனங்களின் க்ஷேமமும் சுகங்களும் மேன்மேலும் மிகுதியுறும்.

■ நமக்கு முடியாத காரியத்தைக் கைவிட லாகாது. நம்மைக் காட்டிலும் திறமையுள்ள ஒருவன் கையிலே கொடுத்து, அவன் கீழே சிற்றாளாய் இருந்து தொழில் பழகிக் கொண்டு, பிறகு நாமாகச் செய்ய வேண்டும்.

■ கைத்தொழிலாலே செல்வம் விளைகிறது. அறிவுத் தொழிலால் அது சேகரிக்கப்படுகிறது. கைத்தொழில் செல்வத்தை ஏற்படுத்துகிறது. அறிவுத் தொழில் கைத்தொழிலை நடத்துகிறது.

■ உள்ளத்திலே சத்து இல்லாதவர்களுக்கு ஒரு தொழிலும் நேரே வராது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வியாபாரம்

■ க்ஷேமத்துடனும், செழிப்புடனும் ஊர் இருந்தால் ஒழிய, வியாபாரம் செழிக்காது. வியாபாரத்துக்கு மகிமை வரவேண்டுமானால், ஊருக்கே ஒரு மகிமை வரவேண்டும்.

■ செல்வம் ஒரு நாட்டில் சிலருக்கு வசப் பட்டதாய், பலர் ஏழைகளாக இருக்கும்படி செய்யும் வியாபார முறையைக் காட்டிலும், சாத்தியப்பட்ட வரை அநேகரிடம் விரவி இருக்கும்படி செய்யும் வியாபார முறைகள் மேன்மையாகப் பாராட்டத் தக்கனவாம்.

■ மிகவும் சரசமான இடத்தில் விலைக்கு வாங்கி, மிகவும் லாபகரமான சந்தையில் கொண்டுபோய் விற்க வேண்டும் என்ற பழைய வியாபாரக் கொள்கையை எப்போதும் பிரமாணமாகக் கொள்ளக்கூடாது.

விளைபொருளும், செய்பொருளும் மிஞ்சிக் கிடக்கும் தேசத்தில் விலைக்கு வாங்கி, அவை வேண்டி இருக்கும் இடத்தில் கொண்டுபோய் விற்கவேண்டும் என்பதே வியாபாரத்தின் பிரமாணமான கொள்கை ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொழிற் கல்வி

- கைத்தொழில் கல்வியே நமக்குப் பிராணாதாரம். நமது பாடசாலைகளிலே கைத்தொழில் வகுப்புகள் ஏற்பட வேண்டும். அத்துடன் ஊர்தோறும் தனியான தொழிற் பாடசாலைகள் ஏற்படவேண்டும்.

- செல்வம் பயக்கும் படிப்பையேதான் ஒருவன் படிக்கவேண்டும்.

- வயிற்றுக்கு - சாப்பாட்டிற்கு - வழி இல்லாமல் இருக்கையில் வெறும் அறிவு புகட்டும் படிப்பு மாத்திரம் போதாது.

ஒரு பையன் பள்ளிக்கூடத்து எந்த வகுப்பிலாவது படித்துக் கொண்டு இருந்து பள்ளிக்கூடத்தை விட்டு விட்டாலும் கூட, அவன் தனது ஜீவனத்திற்குப் பொருள் சம்பாதித்துக் கொள்ளக் கூடிய வழியை அவன் தெரிந்து கொண்டவனாய் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் படித்த படிப்பு வியர்த்தமே. தொழிற்படிப்புடன் சேர்ந்துள்ள ஞான விருத்திக்கான படிப்பைத் தான் கட்டாயமாய் சிறுவர்களுக்குப் பயிற்சி செய்விக்கவேண்டும்.

4

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உழைப்பு

■ எப்போதும் பாடுபடு. எப்போதும் உழைத்துக் கொண்டு இரு. உழைப்பிலே சுகம் இருக்கிறது. வறுமை, நோவு முதலிய குட்டிப் பேய்கள் எல்லாம் உழைப்பைக் கண்டவுடன் ஓடிப்போய் விடும்.

■ உழைப்பு எப்போதும் உண்டு. "தெய்வமே சரண்" என்று இருப்போர் உள்ளத்தில் தாபம் இல்லாமல் உழைப்பார்கள். ஆனபடியால், அவர்களுடைய செய்கைக்கு வலிமை அதிகம்; வேகம் அதிகம்; உயர்வு அதிகம்; பயன் அதிகம்.

■ கையினால் உழைக்காமல் மனத்தால் விரும்புவோன் தன்னைத்தானே தின்று கொள்கிறான்.

■ உழைப்பு எப்போதும் உண்டு. இதிலே "நான்" என்ற பாரத்தை நீக்கிவிட்டு உழைத்தால், வேலை கிறுகிறு என்று வேகமாகவும், பிழை இல்லாமலும் நடக்கும்.

தன்னைத் தூக்கித் தலையிலே வைத்துக் கொண்டு வேலை செய்தால் வேலை குழம்பும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்பிக்கை

நம்பிக்கையே காமதேனு; - அது கேட்ட வரம் எல்லாம் கொடுக்கும்.

நம்பிக்கை உண்டானால் வெற்றி உண்டு. அந்த நம்பிக்கையின் முக்கிய லட்சணம் என்னவென்றால், விடாமுயற்சி.

மனிதனுக்குப் பகை புறத்தில் இல்லை. நமக்குள்ளே சத்துருக்கள் மலிந்து கிடக்கிறார்கள்.

பயம், சந்தேகம், சோம்பல் முதலான குணங்கள் நம்மை ஜயம் அடைய வொட்டாமல் தடுக்கும் உட்பகைகளாம். இவை அனைத்துக்கும் ஒரே பெயர் : அதாவது, நம்பிக்கைக் குறைவு. இந்த ராக்ஷசனை அழித்தால் ஒழிய நமக்கு நல்ல காலம் வராது.

நம்முடைய முயற்சியின் ஆரம்பத்தில் நம்மைப் பிறர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பலர் துணை செய்ய மாட்டார்கள். ஆனால் நம்பிக்கையைக் கைவிடாமல் இருந்தால் காலக்கிரமத்தில் வெளி உதவிகள் தாமே வரும். ஆரம்பத்தில் நமக்கு நாமே துணை . . .

நம்பினார் கெடுவதில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முயற்சி

முயற்சி உண்டானால் உடம்பிலே வலிமை உண்டு. உள்ளத்திலே மகிழ்ச்சி உண்டு. கல்வி உண்டு, செல்வம் உண்டு, நீண்ட வயதும் புகழும் இன்பங்களும் உண்டு.

முயற்சி இருந்தால் பயம் இல்லை. முயற்சி உண்டானால் வெற்றி உண்டு. முயற்சி உடையவனுக்கு விடுதலை கைகூடும்.

ஒரு காரியத்தைத் தொடங்குவோன் அதன் சம்பந்தமான விஷய நுட்பங்கள் தெரிந்தவனாகவும், விடாமுயற்சி உடையவனாகவும் இருந்தால், அந்தக் காரியம் எப்படியும் கைகூடிவிடும்.

செல்வமும், அழகும், கல்வியும், வலிமையும் ஜந்துக்களுக்கு அதிக சர்வத்தை உண்டாக்குகின்றன.

தன்னைக் காட்டிலும் இந்த நிமிஷம் ஒரு விஷயத்திலே தணிந்திருப்பவன் எப்போதும் தணிவாகவே இருப்பான் என்று மூடன் நினைக்கிறான்.

எந்தத் தொழிலும் யாருக்கும் வரும். வருந்தினால் வாராதது ஒன்றும் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மை - சத்தியம்

நாம் ஒருவருக்கு ஒருவர் உண்மையாய் இருக்க வேண்டும். தகப்பனும் பிள்ளையும், கணவனும் மனைவியும், குருவும் சிஷ்யனும், அரசனும் குடிகளும், எஜமானும் வேலைக் காரனும், கொள்வோனும் கொடுப்போனும், ஆட்சியும் ஆளப்படுவோரும், சுதேசியும் விதேசியும் - இன்னும் உள்ள இவ்வித இரட்டையர்களும் ஒருவருக்கு ஒருவர் உண்மையாய் நடந்து கொண்டு வரவேணும். இருவரில் ஒருவர் சத்தியத்தைக் கைவிடினும் அவ்விருவரும் கேட்டிற்கு உள்ளாவார்கள்.

எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கு எல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கு எல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி.

உண்மையே சொல்லவேண்டும். உண்மை விரதம் தவறக்கூடாது. தவற வேண்டிய அவசியம் இல்லை; உண்மை கூறினால் தீங்கு நேரிடும் என்று நினைப்போர் தெய்வம் உண்மை என்பதை அறிய மாட்டார்கள். தெய்வம் உண்மை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மை - சத்தியம்

■ யாருக்கும் பயந்து நாம் நமக்குத் தோன்றுகிற உண்மைகளை மறைக்கக் கூடாது.

ஆணும் பெண்ணும் ஒன்றுக்கொன்று உண்மையாக இருந்தால் நன்மை உண்டாகும்; பதிவிரதைக்கு அதிக வீரமும் சக்தியும் உண்டு.

■ சத்தியமும் தர்மமுமே இவ் வுலகத்தில் சாசுவத வஸ்துக்கள் ஆகும். பொய் நிலைத்து இருக்காது, அநீதியின் வாழ்வு எல்லாம் பகல் வேஷம் போலத்தான். கோழைமையும், பயமும் மனிதர்களுக்குச் சுபாவம் இல்லை ஆதலால், கொஞ்ச நேரம் ஸ்திரமாய் இருப்பது போலத் தோன்றிப் பிறகு மறைந்துவிடக் கூடியன ஆகும்.

■ சத்தியத்தைக் கைவிடாது இருக்கும் வரை நமக்கு அழிவு இல்லை. எப்பொழுது அந்த உத்தம தர்மம் நமது கையை விட்டு நழுவுகிறதோ, அப்பொழுதே விநாசத்தின் தோற்றங்கள் நமக்குப் புலப்படும்.

உண்மை இல்லாத மனிதன் பிசாசாவான். உண்மை இல்லாத ஜாதியார் அசுரர்கள் ஆவர். இவர்கள் அழிந்து போவார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மை - சத்தியம்

■ வீட்டிலும் வெளியிலும், தனிமையிலும் கூட்டத்திலும், எதிலும் எப்போதும் நேர்மை இருக்கவேண்டும்; உண்மை இருக்க வேண்டும்.

■ கல்விப் பயிற்சிக்குத் துணைவேண்டும் என்று பெரியோர் சொல்லுகிறார்கள். அது மெய்யே. ஆனால், உண்மைத் தேட்டத்திற்கு (சத்திய பரிசோதனத்திற்கு)த் தனியே போகவேண்டும்.

உண்மை தேடப் போகும்பொழுது துணை கூட்டிக் கொண்டு போகலாகாது. உண்மையைக் கண்டு மீண்ட பின்பு அதைப் பிறருக்குக் கூறலாம்; கூறுவது கடமை.

■ உண்மை மனித இயற்கைக்கு உடன் பிறப்பாக இருந்த போதிலும், எந்தக் கணத்திலே மனிதன் தன் மதி இழந்து, தான் யோசியாது பிறன் யோசனையைக் கண்ணை இறுக மூடிக் கொண்டு பின்பற்றுகிறானோ, அப்போதே உண்மையைத் தவறவிட்டு விடுகின்றான்.

■ உண்மையை நேர்மையாலே காக்க வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பு

■ அன்பே தெய்வம். அன்பு இருந்தால் குழந்தையும் தாயும் சமானம்; ஏழையும் செல்வனும் சமானம்; படித்தவனும் படியாதவனும் சமானம்.

அன்பு இருந்தால் மனிதனும் தெய்வமும் சமானம். அன்பு பூமியிலே மேலோங்கி நிற்கும்.

■ 'அன்பு உண்டானால் இன்பம் உண்டு' என்பதைப் புத்த பகவான் கண்டுபிடித்துச் சொன்னார். அந்த யுக்தியின் மகிமையை நேரே மனிதர் தெரிந்து கொள்ளாமல், அவர் காட்டிய பயனை அடையாமலே இருந்து வருகிறார்கள்.

அன்பு கொள்கையில் இருந்தால் போதாது; செய்கையில் இருக்கவேண்டும்.

■ 'அன்பே இன்பம் தரும்; பகைமை அழிக்கும்' என்று தெளிந்தோமா? நல்லது, எழுங்கள், கோடிக்கணக்கான மானிடர் எங்கும் எப்போதும், எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தத் தொடங்குவோம்.

■ அன்பு இருந்தால் பயம் தெளிந்து போகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பு

■ அன்பு பொறுக்கும். அன்பு இருந்தால் கோபம் வராது. அன்றி ஒருவேளை தன்னை மீறிக் கோபம் வந்த போதிலும் மிகவும் எளிதாக அடங்கிப் போய்விடும்.

■ அன்பு இல்லாவிடில் மனித வாழ்க்கை நடைபெறாது; வானமும் இயலாது. அன்புதான் இவ் வுலக முழுவதையும் சிதறாதபடி ஆதரிப்பது. அன்பு ஒரு க்ஷணம் கண் மூடி விடுமானால், உலகமும் உயிர்களும் அழிந்து போய்விடும்.

■ எல்லா ஜீவராசிகளிடத்தும் அன்பு செலுத்தவேண்டும்.

■ மனுஷ்ய ஜீவரெல்லாம் உடன் பிறந்தாரைப் போல; மனுஷ்யர் பரஸ்பரம் அன்போடு இருக்க வேண்டும். அன்பே தாரகம்.

■ வலியவன் எளியவனிடம் அன்பு செலுத்த வேண்டும்.

■ அன்பினால் உலகத்தின் துயரங்களை எளிதாக மாற்றி விடலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லோகோபகாரம்

- தனது இன்பத்தை விரும்புவோன் முதலாவது செய்ய வேண்டிய காரியம் லோகோபகாரம்.

- இவ் வுலகத்தில் நாம் செய்கிற ஒவ்வொரு செய்கையும் சுய பிரயோஜனத்தைக் கருதாமல், லோகோபகாரத்தை முன்னிட்டுக் கொண்டு செய்ய வேண்டும்.

- லோகோபகாரத்தையே பரிபூரணமாகச் செய்வோன் மனிதநிலை கடந்து அமரநிலை பெறுவான். இவ் வுலகத்தில் இந்தப் பிறவியில் பயன் அடைவான்.

- நாம் மனமாரப் பிறருக்குக் கஷ்டமேனும் நஷ்டமேனும் விளைவிக்கக் கூடாது. உலகத்துக்கு நன்மை செய்து கொண்டே இருக்கவேண்டும். தன்னுயிரைப் போல மன்னுயிரைப் பேண வேண்டும்.

- 'நலம் செய்வோன் என்றும் கெட்ட வழி சேரமாட்டான்' என்று கீதை சொல்லுகிறது. மனம் தளராமல் லோகோபகாரம் செய்து கொண்டே போனால், . . பிறகு நன்மை உதயம் ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடல்

■ உடம்பிலே நோய் இல்லாமல் வலிமையுடன் இங்கே நூறாண்டு வாழலாம்.

■ உடம்பை வலிமை செய்வதற்கு மன வலிமை வேண்டும்.

கசரத் முதலிய பழக்கங்களில் உடம்பு பலம் ஏறுவதற்கு மன உறுதியும் ஆசையும் முக்கிய காரணங்களாக வேலை செய்கின்றன.

■ உடம்பு நாடிகளுக்கு வசப்பட்டது. நாடிகள் மனதின் வசமாகும். ஆகையால், உடம்பில் உள்ள நோய்களைத் தீர்த்து வலிமை ஏற்றுவதற்கு மன உறுதி, நம்பிக்கை, உத்சாகம் முதலிய குணங்கள் பிரதானமாகக் கொள்ளத் தகும்.

■ எவனும் உடம்பை உழைப்பினாலும், அசைவினாலும் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளவேண்டும். மனதை உத்சாக நிலையில் வைத்துக்கொண்டால் உடம்பிலே தீவிரம் உண்டாகும். உடம்பைத் தீவிரமாகச் செய்து கொண்டால் மனது உத்சாகத்துடன் இருக்கும். மனத் தளர்ச்சிக்கு இடம் கொடுக்கலாகாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடல்

■ நோய் உள்ள உடம்பு பயன் இல்லை. நோயை ஒருவன் தனது மனோ பலத்தாலே நீக்கிவிடலாம்.

நல்ல காற்று, நல்ல நீர், ஒளி, வெயில் - இவற்றிலே உடம்பு பழக வேண்டும்.

நாள்தோறும் ஏதேனும் ஓர் காரியத்தில் உடல் வெயர்க்கும்படி உழைக்கவேண்டும்; இது புதிய உயிர் கட்டுவதற்கு அடிப்படை

■ அறிவை நல்ல வழிகளில் உழைப்பவனுடைய உடம்பு முயற்சி இல்லாமல் சோம்பிப் படுத்திருக்க நியாயம் இல்லை.

■ உடலை வைரம் போல உறுதி உடையதாகவும், பட்சிகளைப் போல லாகவம் உடையதாகவும், சிங்கத்தைப் போல வலியுடையதாகவும் செய்யவேணும். உடல் வசப்படா விட்டால், இந்த உலகத்தில் வாழ்க்கை பெரும் துன்பம்தான்.

■ பூஜை, கல்வி, போதனை முதலியனவும் சரீர உழைப்புப் போலவே கவலையை நீக்கி, உடம்பைப் பேணும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அச்சம்

அச்சமே மடைமை; அச்சம் இல்லாமையே அறிவு.

அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது.

எல்லாப் பாவங்களைக் காட்டிலும் வலியது - மற்றெல்லாப் பாவங்களுக்கும் காரணமாவது பயம்.

எனவே, பயத்தை வென்றால் மற்றப் பாவங்களை வெல்லுதல் எளிதாய் விடும். மற்றப் பாவங்களை வென்றால், தாய்ப் பாவமாகிய பயத்தை வெல்லுதல் பின் எளிதாம்.

லோகத்துக்கு இனியது செய்வோன் தன் உள்ளத்தில் பயம் வைத்துக் கொண்டு இருக்கலாகாது.

பயம் தீர்வதற்கு வழி என்ன? பகை தீர்ந்தால் பயம் தீரும்.

பயத்தை உள்ளே வளர்ப்பவன் பாம்பை வளர்க்கிறான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவலை

■ எதற்கும் கவலைப்படாதே. கவலைப் படாது இருத்தலே முக்தி. கவலைப்படாது இருந்தால் இவ்வுலகத்தில் எந்த நோயும் வராது. எவ்வித ஆபத்தும் நேராது. தவறி எவ்வித நோய் அல்லது எவ்வித ஆபத்து நேர்ந்த போதிலும் ஒருவன் அவற்றுக்குக் கவலை யுறுவதை விட்டு விடுவானாயின், அவை தாமே விலகிப் போய்விடும்.

■ கவலையை வென்றால் மரணத்தை வெல்லலாம்; பயமும், துயரமும், கவலையும் இல்லாது இருந்தால் இவ் வுலகத்தில் எக்காலமும் சாகாமல் வாழலாம்.

■ பூச்சிகளால் மனிதர் சாவது இல்லை; நோய்களாலும் சாவது இல்லை; கவலை யாலும் பயத்தாலும் சாகிறார்கள்.

■ கவலை மனிதனை அரித்துக் கொன்று விடும்.

■ கவலையும் பயமும் பகைவர்.

■ கவலையாலும் பயத்தாலும் மரணம் உண்டாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவலை

கவலைகள் என்ற விஷ ஜந்துக்கள் ஒருவருடைய சரீரத்தை உள்ளூர அரித்து விடுகின்றன. சரீரத்தை மட்டுமா? அறிவையும் பாழாக்குகின்றன. மறதியையும் அதிகப்படுத்தி விடுகின்றன. முக்கியமான செய்திகள் எல்லாம் நல்ல சந்தர்ப்பத்திலே நினைவிற்கு வராமல் போய்விடுகின்றன.

படித்த படிப்பு எல்லாம் பாலைவனத்திலே பெய்த மழைபோல நிஷ்பலனாய் விடுகின்றது. அறிவிலே பிரகாசம் இல்லாமல், எப்போதும் மேகம் படர்ந்ததுபோலாய் விடுகிறது. யோசனை தட்டுகிறது.

ஐயோ! இந்தக் கவலைகளாகிய சிறிய சிறிய விஷப்பூச்சிகளுக்கு உள்ள திறமை வைத்திய சாஸ்திர நிபுணர்கள் கூறும் மகா கொடூரமான - கண்ணுக்குத் தெரியாத - நோய்ப் பூச்சிகளுக்குக்கூடக் கிடையாது.

சோம்பேறியின் விருப்பங்கள் கவலை களாக மாறுகின்றன. சோம்பேறியின் மனத்தைக் கவலைகள் சூறையாடுவதுபோல், அவன் உடம்பை வியாதிகள் சூறையாடுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொறுமை

இவ் வுலக வாழ்க்கையில் ஒருவன் வெற்றி அடைய வேண்டுமானால், அவன் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்கள் எல்லா வற்றிலும் மிக மிக மிக உயர்ந்த குணமாவது பொறுமை.

மனிதனுடைய மனம் சிங்கம் போல் தாக்கும் திறனும், பாயும் திறனும் கொண்டு இருப்பது மட்டுமே அன்றி, ஒட்டகத்தைப் போலே பொறுக்கும் திறனும் எய்த வேண்டும். அவ்விதமான பொறுமை, பலம் இல்லாதவர் களுக்கு வராது.

பொறுமை இல்லாதவனுக்கு இவ் வுலகத்தில் எப்போதும் துன்பமே அன்றி, அவன் ஒருநாளும் இன்பத்தைக் காணமாட்டான்.

ஒருவனுக்கு எத்தனைக்கு எத்தனை பொறுமை மிகுதிப் படுகிறதோ, அத்தனைக்கு அத்தனை அவனுக்கு உலக விவகாரங்களில் வெற்றி உண்டாகிறது.

வீட்டிலே பொறுமை பழகினால் அன்றி, ஒருவனுக்கு நாட்டு விவகாரங்களில் பொறுமை ஏற்படாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்பம்

- தன்னை மற. தெய்வத்தை நம்பு. உண்மை பேசு. நியாயத்தை எப்போதும் செய். எல்லா இன்பங்களையும் பெறுவாய்.

- இந்த உலகம் இன்பம். இதில் உள்ள தொழில், வியாபாரம், படிப்பு, கேள்வி, வீடு, மனைவி, மக்கள் - எல்லாவற்றிலும் ஈசன் அளவிறந்த இன்பத்தைக் கொட்டி வைத்து இருக்கிறான். விதிப்படி நடப்போர் இந்த சுகங்களை நன்றாக அனுபவிக்கிறார்கள். ஈசனுடைய விதி தவறும் கூட்டத்தார் துன்பம் அடைகிறார்கள்.

- இன்பம் ஒரு ஜுரம். ஜுரத்திலே உஷ்ணம் ஓர் வரை கடந்து விட்டால், பிறகு குளிர்ச்சி தோன்றி, ஜன்னி பிறந்து விடுவது போலவே இன்பத்தின் முடிமீது துன்பம் இருக்கின்றது.

- இன்பங்கள் எல்லாம் துன்பங்களுடனே கலந்து இருக்கின்றன. துன்பங்களை அறிவினால் வெட்டி எறிந்து விட்டு, இன்பங்களை மாத்திரம் சுவைகொள்ள வேண்டும் என்று ஜீவன் விரும்புகிறது.

5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்பம்

உலகத்தில் மனிதனுக்கு நெடுங்கால இன்பங்கள் வேறு எத்தனையோ இருக்கின்றன.

நேராக உண்டு வந்தால், அதாவது பசி அறிந்து உண்பது என்ற விரதம் கொண்டால் மனிதருக்கு உணவின்பம் எப்போதும் தெவிட்டாது.

நோயின்றி இருந்தால் ஸ்நானத்தின் இன்பம் என்றும் தெவிட்டாது.

இன்னும் நட்பு, கல்வி, சங்கீதம் முதலிய கலைகள் முதலியன எக்காலமும் தெவிட்டாத இன்பங்கள் இவ் வுலகில் மனிதருக்கு எண்ணின்றி நிறைந்து கிடக்கின்றன.

இப்படி இருக்க, இவ் வுலக இன்பங்கள் க்ஷணத்தில் தோன்றி மறையும் இயல்பு உடையன என்றும், நீர் மேல் குமிழிகள் ஒத்தன என்றும் சொல்வோர் அறிவு இல்லாதோர்; சோம்பேறிகள்; நெஞ்சுறுதி இல்லாதோர்.

கண் இல்லாதவன் வான சாஸ்திரம் படிக்க முடியாது. இன்பமோ அன்புலகத்தைச் சேர்ந்த பதார்த்தம். ஆதலால், அன்பு இல்லாவிடின் இன்பம் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय पुस्तकालय

இன்பம்

எதைத் தொட்டாலும் இன்பமும் துன்பமும் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், நாம் அறிவினாலே பொருள் களின் துன்பத்தைத் தள்ளி இன்பத்தை எடுத்துக் கொள்ளலாம்.

தண்ணீர் - குளித்தால் இன்பம்; குடித்தால் இன்பம்.

தீ - குளிர் காய்ந்தால் இன்பம்; பார்த்தாலே இன்பம்.

மண் - இதன் விளைவுகளிலே பெரும் பான்மை இன்பம்; இதன் தாங்குதல் இன்பம்.

காற்று - இதைத் தீண்டினால் இன்பம்; மூச்சிலே கொண்டால் இன்பம்.

உயிர்களுடனே பழகினால் இன்பம். மனிதரின் உறவிலே அன்பு இருந்தால் இன்பக்கட்டி.

பின்னும் இவ் வுலகத்தில் உண்ணுதல் இன்பம், உழைத்தல் இன்பம், உறங்கல் இன்பம், ஆடுதல் இன்பம், கற்றல், கேட்டல், பாடுதல், எண்ணுதல், அறிதல் - எல்லாம் இன்பம்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலம்

"காலம் பணவிலை உடையது" என்ற குறிப்புடைய இங்கிலீஷ் பழமொழி ஒன்று இருக்கிறது. இந்த சமாசாரம் நம்மவருக்குத் தெரிவதே கிடையாது. பொழுது வீணே கழிக்கப்படுமாயின், அதனால் பண லாபம் கிடையாமல் போகும்.

இன்று செய்யக் கூடிய காரியத்தை நாளைக்குச் செய்யலாம் என்று தாமசப்படுத்தி வைப்பதனால், அந்தக் காரியம் பலமான சேதம் அடைந்து போகும். எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்யும்போது அதில் வெற்றி பெரும்பாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அதைத் தூங்கப் போட்டுவிட்ட பிறகு செய்யப் போனால், அதில் ஆரம்பத்தில் இருந்த ரசம் குறைந்து போகும். அதற்குத் தக்கபடி பயனும் குறைவு எய்தும்.

காலம் மாற மாற, பாஷை மாறிக் கொண்டு போகிறது; பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலம்

■ ஏழையாக இருப்பவன் பெரிய செல்வ வானாக வேண்டுமானால், பல வருஷங்கள் ஆகின்றன.

கல்வி இல்லாதவர் கற்றுத் தேறப் பல வருஷங்கள் ஆகின்றன.

உலகத் தொழில்களிலே தேர்ச்சி அடைய வேண்டுமானால் அதற்குக் காலம் வேண்டும்.

ஆத்ம ஞானம் பெறுவதற்குக் காலம் வேண்டும். "பொறுத்தவன் பூமி ஆள்வான்".

■ லாபா லாபங்கள் யோசித்த பிறகுதான் ஒரு துறையில் இறங்க வேண்டும். ஆனால், வாழ்நாள் முழுதும் வெறுமே யோசனை செய்து கொண்டு இருந்து, காரியம் தொடங்காமலே காலத்தைக் கழிப்போர் எவ்வித இன்பத்தையும் அறியாமல் மாய்ந்து போகிறார்கள்.

■ காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டு இருக்கிறது.

■ ஊர் வாயை மூட ஒரு உலைமூடி உண்டு. அதன் பெயர் காலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்றோர் கடமை

■ புத்திரர்களுக்கு நல்லறிவு ஊட்டி, நல்வழிப் படுத்தி, நற்கருமங்களில் விருப்பும், துர்க் கருமங்களில் வெறுப்பும் உண்டாகச் செய்து, தெய்வபக்தியாகிய ஞான ஒளியையும், அவர்கள் இருதயத்தில் பிரகாசிக்கச் செய்வதே பெற்றோர்களின் கடமை.

■ கேவலம், புதல்வனைப் பெற்று விட்ட தனாலேயே ஈன்றோர்க்குப் புகழ்ச்சி உண்டாவது இல்லை. சத்புத்திரனாயும், சன்மார்க்க வழி அறிந்து நடப்பவனாயும், கண்டோர் புகழும் காருண்யம் உள்ளவனாயும் இருக்க வேண்டும்.

■ பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும் முன்னரே தெய்வ பக்தி, தேசபக்தி - முதலிய வற்றில் அவர்களைப் பழக்குவிக்க வேண்டும். இதற்கு மத விஷயமான கல்வியும்கூடச் சேர்த்துக் கற்பித்தால் அன்றி நற்குண, நற் செய்கைகள் உண்டாகா. நல்வினை இது என்றும், தீவினை இது என்றும் உணர்த்து வதும், அவற்றின் பயனாகிய சொர்க்க, நரக லோக வித்தியாசங்களை விளக்கிக் காட்டுவதும் மத நூல்களே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதம்பம்

ஈசன் செயல்

■ ஈசன் நம்மிடத்தில் அறிவை விளங்கச் செய்கிறான். அறிவே நமது வடிவமாக அமைத்து இருக்கிறான். அறிவு இன்பத்தை விரும்புகிறது.

அளவில்லாத அழகும் இன்பமும் கொண்ட உலகம் ஒன்று நம்மோடு இருக்கிறது.

எப்போதும் இவ் வுலகம் இன்பம். இந்த உலகம் கவலை அற்றது ஆகும்.

மாட்சிமை பெற

■ மாட்சிமை பெறுவதற்குத் தீராத விருப்பமும் துணிவுமே வழி. வேறு வழி இல்லை.

ஒருவன் தெய்வபக்தி உடையவனாக இருந்தாலும் அல்லது நாஸ்திகனாக இருந்தாலும் இந்த வழியை அனுசரிக்கலாம்.

நாஸ்திகர் அறியக்கடவது யாதெனில் : - "இவ் உலகம் நமது தாய்" என்பது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைமைத் தொழில்

■ தன்னைத் தானே திருத்திக் கொள்வதே பிரதானம்.

தன்னைத் திருத்தி அமரனாகச் செய்து கொள்க. அதுவே ஒருவன் செய்ய வேண்டிய தலைமைத் தொழில்.

மேன்மக்கள்

■ எல்லாத் தொழில்களுக்கும் சாஸ்திரமே நேத்திரம்.

சரீர இன்பங்களைத் தேடுவதே முதற் காரியமாகக் கொண்ட மனிதர் மிகுந்து போய் இருக்கும் இவ் வுலகத்தில், சிலர் அந்தப் படியைக் கடந்து மேல் ஏறிப்போய் உண்மை தேடுவதே முதல் காரியம் என்றும், மற்ற தெல்லாம் அதற்குப் பிறகுதான் என்றும் உணர்ந்து நடப்பராயின், அவரே தலைமக்கள்.

மானிட வாழ்க்கை

■ மானத்துடனும், தெய்வ பயத்துடனும், தர்ம சிந்தனையுடனும் வாழ்வது அன்றோ மானிட வாழ்க்கை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடும்ப வாழ்க்கை

வீடு துன்பமாக இருப்பதன் மூல காரணமே கணவனுக்கும் மனைவிக்கும் மனப் பொருத்தம் இல்லாமை.

ஸ்திரீ - புருஷ விரோதத்தால் உண்டாகும் துன்பங்களே வீட்டுத் துன்பங்களுக்கு எல்லாம் ஆதாரம். குடும்ப வாழ்க்கையே மற்று எல்லா வாழ்க்கைகளிலும் சிறந்தது.

வாழ்க்கைப் பயன்

உலக வாழ்க்கையில் மானிடராலும், மற்ற உயிர்களாலும் விரும்பப்படும் மிகச் சிறந்த பயன் எப்போதும் மாறாத, எப்போதும் குறையாத இன்பம் எய்தி வாழ்தல்.

நமது கடமை

புதுப்புது புத்தகங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், மற்றும் திருஷ்டி சோதனை மூலமாகவும் நமது நாட்டு ஸ்திரீகளுக்கு நல்லறிவு பிறப்பித்து, அவர்களின் நிலைமையை உயர்த்த வேண்டுவதே நமது நாட்டாரின் முதல் கடமை. இதை மறந்தவன் நமது நாட்டிற்கு விரோதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமூகக் கடமை

ஏழைகளுக்கு உதவி புரிதல், கீழ் ஜாதியாரை உயர்த்தி விடுதல் முதலியனவே ஜன சமூகக் கடமைகளில் மேம்பட்டன.

மாறாத விதிகள்

இயற்கை விதிகளை மாற்றிவிட வழி இல்லை.

நன்மை நினைத்தால் நன்மை விளையும்.
தீமை நினைத்தால் தீமை விளையும்.
பொய் இழிவுதரும்; உண்மை கை தூக்கும்.
இவை மாறாத விதிகள்.

மாறுதல்

நமது ஜன சமூகத்தில் மாறுதல்கள் நடக்க வேண்டும். மாறுதலே உயிர்த் திறமையின் முதல்குறி ஆகும். மேன்மேலும் சௌகரியத்தை விரும்பித் தானாகவே புதிய புதிய மாறுதல்கள் செய்து கொள்ளாத ஜந்துவை இயற்கைத் தெய்வம் வலிய வந்து கீழ்நிலைமைக்கு மாற்றுகிறது. புராதன ஆசாரங்களில் நல்லதைக் கடைப்பிடித்துக் கெட்டதை நீக்கிக்கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாறுதல் இயற்கை

■ ஒரு தரம் ஒரு வழக்கம் ஏற்பட்டுப் போனால், பிறகு அதை மாற்ற முடியாது. ஆதலால், புதிய வழக்கத்தைத் தொடங்குவோர் பின்வரக் கூடிய பலாபலன்களைத் தீர யோசனை செய்தபிறகு தொடங்க வேண்டும்.

மாறுதல் இயற்கை. நல்லபடியாக மாறிக்கொண்டு போதல் புத்திமான்களுக்கு லட்சணம்.

நியாய – அநியாயம்

■ நியாயத்தைக் கொண்டு நிறுத்தினால் அநியாயம் தானே அழிந்து விடும். சிலர் அநியாயத்தை அழிப்பதற்கு மேன்மேலும் அதிக அநியாயம் பண்ணவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

ஆனால், உண்மை அப்படி இல்லை. நியாயம் சாதிப்பது சுலபம் என்றும், லாபகரம் என்றும் மனிதர் தெளிவாக அறிந்து கொண்ட மாத்திரத்தில் அநியாயத்தைத் தாமே நிறுத்தி விடுவார்கள்.

ஒளியைக் காண்பித்தால் இருள் தானே அகன்று விடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசன் எவ்வழி . . .

அரசன் எவ்வழி அவ்வழி குடிகள். அரசனோ, ஆட்சியை ஏந்தின வகுப்பாரோ வாக்குத் தவறி நடந்தாலும், சுயநலத்தை ஜனசமூகத்தின் க்ஷேமத்தைவிடப் பெரிது என்று எண்ணி அதிகாரம் செலுத்தி வந்தாலும் நாட்டில் உள்ள அமைதியும் ஒழுங்கும் கெட்டுப்போம். ஏனெனில், ஜனங்களும் உண்மையினின்றும் விலகி விடுவர்.

ஒவ்வொரு தொழிற்கூட்டத்தாரும், ஒவ்வொரு ஜாதியாரும் அக்கிரம வழிகளில் பிரவேசிப்பார்கள். அந்த ஆட்சிமுறை அழிவதோடு ஜனசமூகமும் க்ஷீணித்துப் போகும்.

ஆகையால், நாம் நித்தியத்திற்கும் முக்திக்கும் உள்ள ஒரே வழியான சத்தியத்தைக் கடைப்பிடித்து நடப்பதில் என்ன இடையூறுகள் நேரிடினும், கவனிக்கலாகாது.

இனிய செயல்

பிறருக்கு இனியது செய்தலாவது யாது? நோய் தீர்த்தல், உணவு கொடுத்தல், அறிவு கொளுத்துதல் முதலிய செய்கை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனோ தைரியம்

உண்மையான தெய்வபக்தி இருந்தால் மனோ தைரியம் உண்டாகும்; மனோதைரியம் இருந்தால் உண்மையான தெய்வபக்தி உண்டாகும்.

மனோ தைரியத்தினால் ஒருவன் இந்த ஜன்மத்திலேயே தேவநிலை பெறுவான். ஆண்மை, வெற்றி முதலிய தெய்வ சக்திகள் அவனைச் சேரும்.

அஞ்சாத மனோதைரியத்தைக் காட்டிலும் சிறந்த புண்ணியம் இவ் வுலகத்தில் இல்லை; வானத்திலும் இல்லை. அதனால் மனிதன் எல்லா இன்பங்களையும் பெறுவான்.

மனிதப் பிறவி

ஆத்மத் தேட்டத்திற்கு மனிதப் பிறவி மிகவும் சௌகரியமானதாக அமைக்கப்பட்டு இருக்கின்றது.

"திருப்தி எதிலும் ஏற்படாது இருத்தல்"- இந்த ஒரு குணமே மனிதப் பிறவிக்குக் காப்பாகவும், அதன் பெரும் சிறப்பாகவும் விளங்குகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனித இயற்கையும் இயல்பும்

■ சுயநலத்துக்கு அனுகூலமாக இருக்கும் காரணங்களை அங்கீகரிப்பதும், பிறர்க்கு உரைப்பதும் மனித இயற்கை.

சுயநலத்துக்கு விரோதமாக நிற்கும் நியாயங்களைச் சாதாரணமாகப் புறக்கணித்து விடுதலும் அல்லது அவற்றுக்கு எதிர் நியாயங்கள் கண்டுபிடிக்க முயல்வதும் மனித இயல்பாம்.

நியாய சாஸ்திரமோ வாதி - பிரதிவாதி என்ற இரண்டு வகையினரின் கொள்கைகளுக்கும் இடம் கொடுக்கத் தக்கது.

மனித சித்தம்

■ மனுஷ்ய சித்தம் கடல்நீரைப் போல் அன்று. ஒரே மொத்தமாக எங்கு பார்த்தாலும் உப்பாய் இருக்கமாட்டாது.

சுபாவத்தினின்றும் மிகுந்த மாறுபாடு அடைந்த சித்தங்களிலேகூடச் சிலசில விஷயங்களில் தெளிவும், இனிமையும் இருக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்மையும் தீமையும்

நன்மையும் தீமையும் மனிதர்கள் தமக்குத்தாமே விளைவித்துக்கொள்கிறார்கள் அல்லாது, அவை வெளியிலிருந்து வருவன அல்ல; தத்தம் கர்ம பலன்களையே எல்லா ஜீவராசிகளும் அனுபவிக்க வேண்டும்.

உள்ளும் புறமும்

உள்ளும் புறமும் ஒன்றுபோலே நடக்க வேண்டும். படித்த வித்துவான்கள் வஞ்சக நடை நடந்தால், அந்தத் தேசம் சூனியமாகி விடும். மனோதைரியம் இல்லாவிட்டால் பயனுடைய செய்கை எதுவுமே செய்ய முடியாது.

இகலோக வளர்ச்சி

நாம் இகலோகத்து அறிவிலும் மேம்பாடு பெற வேண்டும். தெரியாத சாஸ்திரங்களின் ஆரம்பங்களைப் பிறரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். பிறகு அவற்றை நமது ஊக்கத்தாலும் உயர்மதியாலும் மேன்மேலும் வளர்த்து மீளவும் உலகத்தாருக்கு ஊட்ட வேண்டும். இகலோக வளர்ச்சியிலே நாம் தலைமை வகிக்கவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அனுபவ உண்மை

உலகம் நம்முடைய தாய்; அது நமக்குத் துன்பங்கள் விளைவிக்கும்போது நமக்குப் பாடங்கள் கற்றுக் கொடுக்கின்றன.

மூடக் குழந்தையைத் தாய் அடிப்பது போலவும், கட்டி புறப்பட்ட சதையை ரணவைத்தியன் அறுத்து எறிவது போலவும் உலகம் நம்மைத் துன்பப்படுத்துகிறது

பெரும் துன்பம் அடைந்து அதனால் பரிசுத்த நிலைபெற்ற மேதாவிகள் எல்லோரும் இவ் வுண்மையைக் கண்டு கூறி இருக்கிறார்கள்.

கொள்கை

பகுத்தறியும் சக்தி இல்லாத எவனுக்கும் கொள்கை என்று ஒன்று இருக்காது ஒரு கொள்கையை உடையவன் பகுத்தறியும் சக்தி உடையவனாகவே இருக்க வேண்டும்.

வீண் சம்சயம்

நம்முடைய புத்திக்குப் புலப்படும் உண்மை ஒன்றைப் பற்றி வீண் சம்சயம் படும் அதிகாரம் மனதுக்குக் கொடுப்போமாயின், அது நம்மை நரகத்தில் கொண்டு சேர்க்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாசத்தின் அறிகுறி

ஒருவனுக்கு நாசம் வந்துவிட்டது என்பதற்குத் தெளிவான அடையாளம் யாதெனில், அவன் உள்ளத்திலே சமுசயங்கள் வந்து குடிகொண்டு விடும்.

கடைப்பட்ட வாழ்வு

மனிதர் அத்தனை பேருக்கும் போதுமான ஆகாரம் பூமிதேவி கொடுக்கும். பூமி தேவியின் பயனை நேரே கையாளத் தெரியாமல் பொறாமையாலும், அறியாமையாலும் தாறுமாறாக விழல்படுத்திச் சோறு தேடும் இடத்தில் சோறு தேடாமல், ஒருவர்க்கு ஒருவர் கொல்ல வழி தேடி, பலர் வயிறு வாடச் சிலர் வயிறு ஜீரண சக்தி இல்லாமல் போக, மனிதர் பரிதாபகரமாகக் காக்கையிலும் கடைப்பட்ட வாழ்வு வாழ்ந்து வீணே நசித்துப் போகிறோம்.

சொர்க்கம்

கற்புடைய மனைவியுடன் காதலுற்று அறம் பிழையாமல் வாழ்தலே இவ் வுலகத்தில் சுவர்க்க வாழ்க்கையை ஒத்ததாகும். ஒருவனுக்குத் தன் வீடே சிறந்த வாசஸ்தலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்பம் எய்த வழி

■ விடுதலையே இன்பத்திற்கு வழி. விடுதலை பெற்றோர் வறுமையிலிருந்து மாறிச் செல்வம் அடைவார்கள்; மெலிவும் நோயும் நீங்கி, வலிமையும் உறுதியும் பெறுவார்கள். சிறுமை நீங்கிப் பெருமை காண்பார்கள். துன்பங்கள் நீங்கி இன்பம் எய்துவார்கள்.

இன்பத்துடன் வாழ

■ ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. ஆணுக்கு மட்டும் அன்று, பெண்ணுக்கும் அப்படியே

ஆதலால், உயிர் உள்ள வரை இன்பத்துடன் வாழ விரும்புதல் மனுஷ்ய ஜீவனுடைய கடமை.

இன்பத்துக்கு முதல் அவசியம் விடுதலை

அடிமைகளுக்கு இன்பம் கிடையாது

புத்திர பாக்கியம்

■ மானிடர்கள் இகத்தில் அடைய வேண்டிய பாக்கியங்களில் புத்திர பாக்கியம் தவிர, சிறந்தது வேறு இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யௌவனம் பெற வழி

இழந்துபோன யௌவனத்தை மீளவும் பெறவேண்டுமானால், அதற்கு வழி என்ன?

ஒரு வருஷம் மனதிலும், சரீரத்திலும் பிரமசரிய விரதத்தை அனுசரிக்க வேண்டும். காலையில் ஸ்நானம் செய்யவேண்டும். கைகால்களை உழைக்கவேண்டும். யௌவனம் உடைய பிள்ளைகளுடன் சகவாசம் செய்ய வேண்டும். பயத்தை விடவேண்டும். மனோ தைரியத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் தெய்வபக்தி உண்டாக்கிக் கொள்ளவேண்டும். பிறரைத் தாழ்வாக நினைக்கலாகாது. புதிய புதிய கல்விகள் கற்க வேண்டும்.

ஆடவர் நடையும் பெண்டிர் கடமையும்

ஜீவனோபாயத்தை முன்னிட்டுப் புது நாகரீகங்களில் தலையிட்டு, நடை உடை பாவனைகளில் வேறுபட்டு இருக்க ஆடவருக்கு விதி இருந்தாலும், அவர்களுக்கு வாய்த்த பெண்களாவது விவேகிகளாகவும், தேசா சாரத்தைக் கடைப்பிடிப்பவர்களாகவும் காணப்பட்டால், பூர்விக ஆசாரங்கள் தேசத்தில் அடியோடு எடுபடாமல் தலை நாட்டி நிற்க இடம் தரும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எது புகழ்?

தன் பொருட்டாகச் சேகரிக்கப்படும் கீர்த்தி ஒரு கீர்த்தி ஆகுமோ?

ஒரு தேச முழுமைக்கும் கீர்த்தி சேகரித்துக் கொடுப்போனுடைய புகழே புகழ்.

நாம் செய்ய வேண்டுவது

நமக்கு விரோதிகள் சொல்லும் விஷயங்களிலேகூட நமக்கு இதமான விஷயங்களைத் தெரிந்து ஒழுக முயல வேண்டியது நமது பெரும் கடமை ஆகும்.

துணிவு

துணிவே தாய்; அதிலிருந்துதான் கல்வி முதலிய மற்றெல்லா நன்மைகளும் பிறக்கின்றன.

கடவுளைத் தொழ . . .

உலகத்தில் எப்பொழுதும் ஒருவனுக்கு மனநிம்மதியும், நிச்சல புத்தியும் உண்டானால் தான், தன் தன் மதப்படி கடவுளைத் தொழ முடியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வானத்தை வெல்ல

அறிவும் மன உறுதியும் சேர்ந்தால், வானத்தை வெல்லலாம்.

சோதனைகள்

தர்மமே பிரதானமாகிய இவ் வுலகத்தில் வறுமை, வியாதி, வஞ்சனை முதலிய பொறுக்க முடியாத கஷ்டங்கள் எல்லாம் ஏன் ஏற்பட்டு இருக்கின்றன? ஈசன் இவற்றை எதன் பொருட்டுப் படைத்து இருக்கின்றார்? எனில், மனிதன் அந்தக் கஷ்டங்களை எல்லாம் தாங்கி, வெற்றி கொண்டு ஆத்ம சுத்தி அடையும் பொருட்டாகவே. துன்பங்களை நீ எதிர்த்து நிர்மூலம் செய்து பலம் அடைய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே உனக்கு ஈசனால் துன்பங்கள் கொடுக்கப்படுகின்றன. இவற்றை வழக்கத்திலே ஈசனுடைய "சோதனைகள்" என்பார்கள்.

மேன்மையும் கீழ்மையும்

பிச்சை என்று கேட்டவனுக்கு ஒரு பிடி அரிசி போடுவதே மேன்மை; வைது துரத்துதல் கீழ்மை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாகரிக வாழ்க்கை

■ தீராத ஆவலும், அவசரமும், ஓயாத பரபரப்பும் உள்ள ஜ்ர வாழ்க்கை நாகரிகம் ஆக மாட்டாது. சரியான நாகரிகத்துக்குச் சாந்தியே ஆதாரம்.

அடக்கம், பொறுமை, ஜீவகாருண்ணியம் என்ற குணங்களே உண்மையான நாகரிகத்-தையும் நித்திய ஜீவனையும் விளைக்கும்.

எது அறம்?

■ பாட்டைக் கொடுத்தாலும் சரி; நாட்டைக் கொடுத்தாலும் சரி; பணம், கல்வி, மருந்து, தைரியம் - ஏதேனும் ஒரு நல்ல பொருளை உடையவன் வேண்டியவனுக்குக் கொடுத்தால், அஃது அறம்.

ஈகை

■ பொருள் கொடுப்பது மாத்திரமே ஈகை என்று பலர் தவறாகப் பொருள் கொள் கிறார்கள்.

பிறர் பொருட்டாக நம் உயிரைக் கொடுத்தல் கொடை அன்றோ?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருணை

காருண்ணியம் என்பது தனது பந்துக்கள், தனது ஜாதியார் என்பவர்கள் மீது மட்டிலும் வைக்கப்படும் அன்பு அன்று.

உலகத்தில் எல்லாச் சாதியாரையும் தம்மைப் போல் கருதி, அவர்க்கு இரங்கும் நற்குணமே கருணை ஆகும்.

மன்னிப்பு

மனிதனுக்கு உண்மையாகவே புத்தித் தெளிவும், யோக்கியதையும் தொடங்கும் போது, பிறர் குற்றங்களை க்ஷமிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது.

மூடன் தான் செய்த குற்றத்தை மறந்து விடுகிறான்; அல்லது பிறருக்குத் தெரியாமல் மறைக்கிறான்; அல்லது பொய்க் காரணங்கள் சொல்லி அது குற்றம் இல்லை என்று ருஜூப்படுத்த முயற்சி செய்கிறான்.

குற்றத்திற்குக் காரணம் அறியாமை; அதை நீக்கும் வழி சத்சங்கமும் தைரியமும். பிறர் குற்றங்களை க்ஷமிக்கும் குணம் குற்றம் இல்லாதவர்களிடத்திலேதான் காணப்படும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டுவன

■ சமுத்திரத்தைப் போல கம்பீரமும், இமாசலத்தைப் போன்ற சுய தைரியமும் நமக்கு இருக்க வேண்டும்.

அகங்காரம்

■ உலகத்தார் அகங்காரம் என்ற அசுரனுக்கு வசப்பட்டு, சகல தேசங்களிலும் நரக துன்பத்தை அனுபவிக்கிறார்கள்; அகங்காரத்தை வெட்டி எறிந்து விட்டால், மனித ஜாதி அமரர்நிலை அடையும்.

குற்றவாளியைச் சீர்திருத்த . . .

■ குற்றம் செய்த மனிதனைச் சீர்திருத்தி, இனிமேல் அவன் குற்றம் செய்யாதபடி அறிவிலும், ஒழுக்கத்திலும் மேம்பட வழி செய்ய வேண்டும்.

நமது நாட்டின் தர்மம்

■ நமது . . . நாட்டின் முக்கிய தர்மம் என்னவென்றால், ஒருவர் மதத்தை ஒருவர் பழிக்காமல் அவர் அவர்கள் இஷ்டப்படி கடவுளைத் தொழுது நற்கதி பெறட்டும் என்ற மேலான மனோநிலையே யாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடுவு நிலைமை

இவ் வுலகத்தில் வெறுமே நீதி ஸ்தலத்து வழக்குகளின் விஷயத்தில் மாத்திரமே யன்றி, ஜன சமூக சம்பந்தமாகவும், மத சம்பந்தமாகவும், பிற விஷயங்களைப் பற்றியும் தோன்றும் எல்லா வழக்குகளிலும் நடுஉண்மை கண்டு பிடித்தல் சாலவும் சிரமம்.

அளவற்ற தவமும் அதனால் விளையும் ஞானத் தெளிவும் உடையோரே எதிலும் பட்சபாதம் அற்ற மயக்கம் அற்ற நடுஉண்மை கண்டு தேரவல்லார்.

மனதின் சமநிலை

ஒரு மனிதன் தன் மனதில் இரண்டு விதமான மாறுபட்ட அபிப்பிராயங்கள் தோன்றி, "இது நியாயமா - அது நியாயமா" என்று நிச்சயப்படாமல் இருக்கும்போது, தான் செய்யவேண்டுவது யாதெனில், பின்னிட்டு அனுபவத்தினாலேனும் அல்லது தக்க பெரியோரின் போதனையினாலேனும் தனக்கு உண்மை தெரியுமளவும் இரண்டு பட்சங் களிலே ஒன்றின்மீதும் சார்வு கொள்ளாமல் தன் மனதைச் சமநிலையிலே வைத்து இருக்கவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விருப்பும் விலக்கும்

நன்மை வேண்டுவோன் தீமையை விலக்கவேண்டும்.

அறிவுத் தெளிவு வேண்டியவன் மதுவை விலக்கவேண்டும்.

ஜீவதயை வேண்டியவன் மாமிசாதிகளை விலக்கவேண்டும்.

பிரம்ம ஞானம் விரும்புவோன் உலக விருப்பங்களை வர்ஜனம் செய்யவேண்டும்.

செல்வம் நாடுபவன் சோம்பலை நீக்கவேண்டும்.

இவ்வாறே ஒவ்வொரு விஷயத்திலும்.

ஒரு பொருளிலே இச்சை உடையவன் அதற்கு இணங்க வேறு சில பொருள்களை விலக்கித் தீரவேண்டும் என்பது சாஸ்திரம், அனுபவம், யுக்தி மூன்றுக்கும் பொருந்திய விஷயம் ஆகும்.

ஒன்றை விலக்கத் துணிவு இல்லாதவன் மற்றொன்றை அடைதல் சாத்தியம் அன்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெரிவதும், தெரியாததும்

சாவு நமது கண்ணுக்குத் தெரியும்; அறிவுக்குத் தெரியாது.

வாழ்க்கை நமது கண்ணுக்குத் தெரியும்; அறிவுக்கும் தெரியும்.

எண்ணங்கள்

சிறுபிராயத்தில் ஏற்படும் அபிப்பிராயங்கள் மிகவும் வலிமை உடையன; அசைக்க முடியாதன; மறக்க முடியாதன.

வலிமை பெற

நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் மெலி யாருக்கு நாம் இரங்கி, அவர்களை நமக்கு நிகராகச் செய்து விடவேண்டும் என்று பாடுபடுதலே நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும். வேறு வழி இல்லை.

அடுத்த ஜன்மத்தில்

சொந்த பாஷை கற்றுக் கொள்ளாதவர் குரங்குகளாகப் பிறப்பார்கள், அடுத்த ஜன்மத்தில்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைகூடி வரக்கூடிய மருந்து

கொலை கொலையை வளர்க்குமே ஒழிய, அதைத் தீர்க்கவல்லது ஆகாது.

அநியாயம் அநியாயத்தை விருத்தி பண்ணுமே ஒழியக் குறைக்காது.

பாவத்தைப் புண்ணியத்தாலேதான் வெல்லவேண்டும்.

பாவத்தைப் பாவத்தாலே வெல்வோம் என்பது அறியாதார் கொள்கை.

அதர்மத்தைத் தர்மத்தால் வெல்ல வேண்டும்; தீமையை நன்மையாலேதான் வெல்லமுடியும்.

கொலையையும், கொள்ளையையும் அன்பினாலும் பண்பினாலும்தான் மாற்ற முடியும். இதுதான் கடைசிவரை கைகூடி வரக்கூடிய மருந்து. மற்றது போலி மருந்து.

எது நாகரிகம்?

இந்துக்களின் நாகரிகம் விவசாயத் தொழிலைப் பொறுத்து நிற்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதிய உயிர்

புதிய உயிர் என்றால், அது ஒரு வகையிலே மட்டும் பிரகாசம் அடைவது அன்று.

நம்மவரின் அறிவு, தொழில் என்பவற்றின் எத்தனை ஆயிரம் பிரிவுகள் உண்டோ, அவை அனைத்திலும் புதிய ஜீவனுக்கு அடையாள மான ஒளியும், இன்பமும், திறனும், இளமையும் காணப்படும்.

எது நன்மை ?

சேனையிலும் யானையிலும் செலவிடும் பணத்தைக் கல்விக்கும் தொழிலுக்கும் சுகாதாரத்திற்கும் செலவிட்டால் ஜனங்களுக்கு நன்மை உண்டு.

மெய்ம்மையும் பொய்ம்மையும்

புராதன சம்பிரதாயம் என்பதால் மட்டுமே ஒன்று பொய்யாய் விடமாட்டாது; புதியது என்பதால் மாத்திரமே ஒன்றை மெய்யாகக் கொண்டு விடுதலும் பிழை ஆராய்ந்து, அனுபவத்தால் பார்க்குமிடத்தேதான் ஒரு விஷயத்தின் மெய்ம்மையும் பொய்ம்மையும் விளங்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொய்யும் பயமும்

பொய் இல்லாவிட்டால் பார்வை நேராகும். பொய் தீர்ந்தால் நேரே பார்க்கலாம். பயம் தீர்ந்தால் நேரே பார்க்கலாம். பொய் தீர்ந்தால் பயம் தீரும். பயம் தீர்ந்தால் பொய் தீரும்.

இருளும் ஒளியும்

இருளும் ஒளியும் மாறிமாறி வருவது இவ் உலக இயற்கை.

பகலிலே பெரும்பாலும் ஒளியுண்டு; மேகங்கள் வந்து சூரியனை மறைத்தாலொழிய சில சமயங்களில் கிரகணம் பிடிக்கும்; அதையும் தவிர்த்து விட்டால், இரவிலேதான் ஒளியின் வேறுபாடுகளும், மறைவுகளும் அதிகப்படுகின்றன.

பகல் தெளிந்த அறிவு; இரவு என்பது மயக்கம். பகலாவது விழிப்பு; இரவாவது தூக்கம். பகலாவது நல்லுயிர் கொண்டு வாழ்தல்; இரவு லயம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராஜாங்கத்தின் கடமை

ஜனங்களுக்குள்ளே செல்வமும், உணவு, வாசம் முதலிய சௌகரியங்களும், கல்வியும், தெய்வ பக்தியும், ஆரோக்கியமும், நல் ஒழுக்கமும், பொது சந்தோஷமும் மேன் மேலும் விருத்தி அடைவதற்கு உரிய உபாயங்களை இடைவிடாமல் அனுஷ்டித்துக் கொண்டு இருப்பதே ராஜாங்கத்தின் கடமையாவது.

வீர பூஜை

வீர பூஜையானது ஒரு தேசத்தின் அபிவிருத்திக்கு இன்றியமையாதது ஆகும்.

யார் வீரன்?

வீரன் என்றால், வில் எடுத்துப் போர் புரிவோன் மட்டிலும் என்று அர்த்தம் இல்லை. அது மிகவும் சாதாரண ஜனங்களால் கொள்ளப்படும் பொருள்.

உலக நன்மையின் பொருட்டுச் சாமானியரால் முடியாத பெரும் காரியங்களை ஒருவனாக இருந்து நிர்வகித்து முடிப்பவனே வீரன் ஆவான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிகரற்ற வீரர்

■ தெய்வத்தை நம்பினால், தீமை நமக்கு வாராது என்பதைப் பிரத்தியட்ச ஞானமாகக் கொண்டு, ஜீவன் முக்தர் எந்தப் பதவியில் இருந்த போதிலும் நிகரற்ற வீரராக விளங்குவார்.

அவனே ஈசுவரன்

■ துளிகூட, ஒரு அணுக்கூட, மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாது என்று ஒருவன் பரிபூரண சித்தி அடைவானாகில், அவனே ஈசுவரன். குருவி, காக்கை, புழு, எறும்பு - ஒரு ஜந்துவுக்கும் வஞ்சனை பண்ணக்கூடாது.

தெய்வமே சரண்

■ வஞ்சனை இல்லாமல், 'ஏதோ உலகத்தில் பிறந்தோம்; தெய்வம் விட்டதே வழி' என்று ஆற்றின் மீது மிதந்து செல்லும் கட்டைபோல் உலக வெள்ளத்தில் மிதந்து செல்ல வேண்டும். அங்ஙனம் முற்றிலும் பராதீனனாய் எவன் ஈசுவரன் மீது சகல பாரத்தையும் போட்டு விட்டு நடக்கிறானோ, அவனுக்குத் தெய்வத் தன்மை உண்டாகும். இதில் சந்தேகமே கிடையாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசீயக் கல்வியின் கொள்கை

தமிழ்நாட்டில் தேசீயக் கல்வி என்பதாக ஒன்று தொடங்கி, அதில் தமிழ்ப் பாஷையைப் பிரதானமாக நாட்டாமல், பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால், அது "தேசீயம்" என்ற பதத்தின் பொருளுக்கு விரோதமாக முடியும் என்பதில் ஐயம் இல்லை.

தேசபாஷையே பிரதானம் என்பது தேசீயக் கல்வியின் ஆதாரக் கொள்கை; இதை மறந்துவிடக் கூடாது.

மிகவும் சிரமமான வேலை

இள மூங்கிலை வளைத்து விடுதல் சுலபம். முற்றிப் போன மூங்கிலை வளைக்க முடியாது. அதை வளைக்கப் போகுமிடத்தே அது முறிந்து போய்விடும்.

மனித இருதயத்தை இளமைப் பிராயத்தில் சீர்திருத்தல் சுலபம். பின்னிட்டு முதிர்ந்த வயதில் மனித இருதயத்தை வளைத்தல் மூங்கிலை வளைப்பது போல் ஒரேயடியாக அசாத்தியம் அன்று. ஆனால், மிகவும் சிரமமான வேலை.

7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நவீன நாகரிகத்தின் தீங்கு

■ தொழிலாளிகள் கூட்டமாகச் சேர்ந்து தொழில் நிறுத்தி விடுதல் நவீன நாகரிகத்தின் இன்றியமையாத தீங்குகளிலே ஒன்று ஆகும்.

தொழிலாளர் பெருமை

■ தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்குமே பூமி சொந்தமானது. மனித சமூகத்தில் இவர்களே தேனீக்கள். மற்ற நம் போன்றோர் எல்லாம் பிறர் சேகரித்து வைத்த தேனை உண்டு திரியும் வண்டுகள்.

அறிவின் அறிகுறிகள்

■ ஒரு தேசத்தின் பொதுப்புத்தியை அளந்து பார்க்க வேண்டுமானால், அதற்கு எத்தனையோ அறிகுறிகள் உண்டு.

அந்த தேசத்து ராஜாங்க நிலை, தர்ம ஸ்தாபனங்களின் நிலை, கோயில்களின் நிலை - முதலிய எத்தனையோ அடையாளங்களால் ஒரு தேசத்தாரின் பொது ஞானத்தை அளவிடலாம். இவற்றுள்ளே சமாசாரப் பத்திரிகைகளையும் ஓர் அடையாளமாகக் கருதத் தகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வலிமையின் ஆதாரம்

எவ்விதமான வலிமைக்கும் கூட்டம் ஆதாரம். சபை சேர்ந்து பேசினால் மாத்திரம் போதாது. எப்போதுமே எங்கும் நம்மில் ஒவ்வொருவரும் நாம் இன்ன பெருங் கூட்டத்தைச் சேர்ந்து இருக்கிறோம் என்பதையும், நமது வாழ்க்கையின் நோக்கம் இன்னது என்பதையும் மறவாது இருக்க வழி தேட_ வேண்டும்.

ஜாதியின் உட்கருத்து

ஒவ்வொரு ஜாதி(nation)யும் தான் வாழ்வதிலேயும், தான் வளர்வதிலேயும்தான் கருத்தாய் இருக்கும். அது மனித சுபாவம்.

எந்த ஜாதி தன்னைக் காத்துக் கொள்ள முடியாமல், உட்பிரிவுகளாலேனும், அறியாமை யாலேனும் துர்ப்பலம் அடைந்து போய் இருக் கிறதோ, அது அழிந்து போக வேண்டியது தான்.

கூட்டங்களின் பயன்

கூட்டங்கள் கூடி யோசனை பண்ணுகிற விஷயம் கைகூடும். ஓயாமல் கூட்டங்கள் சேர்ந்து திரும்பத் திரும்ப உறுதி செய்யப்படும் தீர்மானம் நிச்சயமாகக் கைகூடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சபைகளின் உட்கருத்து

ஒவ்வொரு குலத்தாரும் சிற்சில சிறு நலங்களை உத்தேசித்தும், பொதுநலத்தை மறக்காமலும் தனித்தனி சபைகள் ஏற்படுத்திக் கொள்வது பிழையாக மாட்டாது.

பொருளால் விளையும் நன்மை

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில் பொருள் உள்ள தேசத்தார், மற்றை இரண்டையும் எளிதில் அடைவார்கள்.

விதி உண்மைதான்!

விதிப்படிதான் இந்த உலகமெல்லாம் நடக்கிறது.

மனித வாழ்க்கை இவ் வுலகத்தின் வாழ்க்கையிலே ஒரு சிறு பகுதி.

விதி தவறி ஒன்றும் நடக்காது.

விதி வெற்றிக்கும் துணை ஆகும். விதியை நம்பி விதை போடாமல் இருந்தால், பயிர் விளையாது. விதியை நம்பி உழைத்தால் அநேகமாக விளையும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடம்பைக் காக்க

வெயர்வை சிந்தும்படி நாள்தோறும் உடலை உழைக்க வேண்டும். நன்றாகப் பசித்த பிறகு போஜனம் செய்ய வேண்டும். மனதிலே சந்தோஷம் வேண்டும். இவற்றாலே ஒருவன் உடம்பைக் காத்தால் ஒழிய, தர்மம் நடக்காது.

சரீர பலம்

படிப்பைக் காட்டிலும் விளையாட்டுக் களில் பிள்ளைகள் அதிக சிரத்தை எடுக்கும்படி செய்யவேண்டும். 'சுவர் இல்லாமல் சித்திரம் எழுத முடியாது'. பிள்ளைகளுக்குச் சரீர பலம் ஏற்படுத்தாமல், வெறுமே படிப்பு மாத்திரம் கொடுப்பதால், அவர்களுக்கு நாளுக்கு நாள் ஆரோக்கியம் குறைந்து அவர்கள் படித்த படிப்பு எல்லாம் விழலாகி, அவர்கள் தீராத துக்கத்துக்கும் அற்பாயுசுக்கும் இரையாகும்படி நேரிடும்.

மூடர்களின் செய்கை

மதக் கொள்கைகளையும், ஆசார சம்பந்தமான அபிப்பிராயங்களையும் அரசியல் விஷயங்களிலே கொண்டு புகுத்துவது மூடர்களின் செய்கை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிணற்றுத் தவளைகள் போல் . . .

■ ஒவ்வொருவரும் சிற்சில விவகாரங்களில் மனத்தைப் பதிய வைத்துக்கொண்டு வெளி உலகத்தின் மாறுதல்களிலே புத்தி செலுத்தாமல் அற்ப விருப்பங்களிலும், அற்பச் செய்கைகளிலும் நாளை எல்லாம் கழிய விட்டுக் கிணற்றுத் தவளைகளைப் போல் வாழ்வதிலே பயன் இல்லை.

யார் கள்வன்?

■ பிறனுடைய சொத்தைத் திருடி, ஊர்க் காவலாளிகளின் விசாரணைகளில் அகப் பட்டு, தண்டனை அடைந்து சிறை புகுந்து வாழ்வோன் மாத்திரமே கள்வன் என்று பாமரர் நினைக்கிறார்கள்.

பிறனுடைய சொத்தை அபகரிக்க வேண்டும் என்று மனதில் எண்ணினால் போதும். அங்ஙனம் எண்ணிய மாத்திரத்-தாலேயே ஒருவன் கள்வனாகி விடுகிறான்.

கள்வனுக்கு உரிய தண்டனை அவனுக்கு மனிதர்களால் விதிக்கப்படாவிடினும், கடவுளால் அவசியம் விதிக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகிழ்ச்சியின் ரகசியம்

■ பிரகலாதனைப் போன்ற தெய்வபக்தியும், மன்மதனைப் போன்ற ஏகபத்தினி விரதமும் ஒருவன் கைக்கொண்டு இருப்பானாயின், அவன் இந்த உலகத்திலேயே ஜீவன் முக்தி அடைந்து, எல்லா அம்சங்களிலும் தேவ பதவி எய்தியவனாய், எப்போதும் மகிழ்ச்சி கொண்டு இருப்பான்.

நமது கடமை

■ முகஸ்துதி செய்பவனையும், பொய் நடிப்புக் காட்டுவோனையும் தலையிலே வைத்துச் சாமர்த்தியம் உள்ளவனையும் யோக்கியனையும் கீழே போடக் கூடாது.

கட்குடியர்

■ கட்குடியர் வேறு என்ன நல்ல லட்சணங்களும் உடையவராக இருப்பினும், அவற்றை விரைவில் இழந்துவிடுவார்கள்.

அவர்களுடைய செல்வமும் பதவியும் விரைவில் அழிந்து போய்விடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்கை

ஒவ்வொரு செய்கைக்கும் பயன் உண்டு. எப்படி விதைக்கிறாயோ, அப்படியே பலனும் கிடைக்கப் பெறுவாய்.

முயற்சி இல்லாதவர்களுக்கு வாழ்வு இல்லை.

மனோ தைரியம் அற்றவர்கள் அறுநூறு ஜன்மம் பேடிகளாகப் பிறப்பார்கள்.

பயனும் விலையும்

இவ் வுலகத்தில் ஒவ்வொன்றுக்கும் விலை உண்டு. யாதேனும் ஓர் நற்பொருள் - பிரமஞானம் முதலாகக் குதிரை வண்டி வரை - எதுவாய் இருந்தாலும் சரி - ஒருவனுக்குக் கிட்டவேண்டுமானால், அவன் அதற்குத் தக்க விலை பொருளாகவேனும், உழைப்பாக வேனும், துன்பமாகவேனும் கொடுத்தே தீரவேண்டும்.

அநீதி

நமக்குள் பரஸ்பர அநீதி யுள்ள வரை தேசத்தில் சமாதானம் இராது. நாம் பல வகைகளிலே துன்பப்பட நேரும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரியப் பயன்

■ ஒரு காரியம் தொடங்கும்போது அதன் பயன் இன்னது என்று நிச்சயமாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அந்தப் பயன் நமக்கு வேண்டியதுதானா என்பதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

நோய்கள் தோன்றக் காரணம்

■ உள்ளத்திலே தோன்றும் அச்சம் முதலியனவே நோய்களைப் பிறப்பிக்கின்றன.

பணக் கவலைகளாலேயும் மனக் குறைகளாலேயும் தான் வியாதிகள் தோன்றுகின்றன.

நோய்களைத் தடுக்க வழிகள்

■ ஒருவனுக்கு வியாதிகள் வராதபடி தடுத்துக் கொள்வது நலம். தன்னை மீறி வந்தால் - நல்ல காற்று, நல்ல நீர், நல்ல வெளிச்சம், சுத்தமான உணவு, இயன்ற வரை சரீர உழைப்பு, மனோ தைரியம், சந்தோஷம் - இவற்றால் பெரும்பான்மையான நோய்கள் இயற்கை யிலேயே சொஸ்தமாய் விடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோயற்ற வாழ்வு

நமது நாட்டு குஸ்திகளை ஆராய்ந்து அறிந்து, ஒவ்வொரு சிறுபிள்ளையும் பாலிய முதல் தேகப்பயிற்சி செய்து வலுவைச் சம்பாதித்துக் கொண்டால், நோயற்ற வாழ்வுடன் நெடுநாள் ஜீவித்து இருக்கமுடியும்.

உணவு

ஊண் மிகுதிக்கு இயற்கையிலே மாற்று உண்டு. ஊண் குறைவுக்கு மரணம்தான் மாற்று. "உண்டவன் உரம் செய்வான்". பரிசுத்தமான உணவுகளை நிறைய உண்ணுதல் வேண்டும். இனிய பழங்கள் நாள்தோறும் உண்ணத் தக்கன.

பசி

சரீரத்தை வியர்க்க வியர்க்க உழைத்தால் நல்ல பசி உண்டாகும்.

பசியும் கோபமும்

பசி வந்தால் கோபம் வருகிறது. பசி அடங்கினால் கோபம் அடங்குகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாப்புலன்

ஐம்புலன்களிலே நாப்புலன் மற்ற நான்கிற்கும் விரோதி.

உணவு இன்பத்திலே பிரியம் உடையவர்கள் செவி, கண் என்ற தெய்வப் புலன்களின் பரம சுகங்களை நன்கு தேர்ந்து உண்பதற்கு வலி இழந்து போய் விடுகிறார்கள்.

தேக பலத்திற்கு எது அவசியம்?

நானாவித விலை உயர்ந்த உணவுப் பொருள்களைத் தின்றால்தான் உடம்பிலே பலம் வரும் என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு.

காரசாரங்களும் வாசனைகளும் உண்டாக்கி, ருசியை அதிகப்படுத்தும் வஸ்துக்கள் தேகபலத்திற்கு அவசியம் இல்லை.

கேப்பைக் களி, கம்பஞ் சோறு - இவற்றால் பலம் உண்டாவதுபோல், பதிர்ப்பேணியிலும், லட்டுவிலும், வெங்காய சாம்பாரிலும் உண்டாகாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத தேசத்தாரின் இயல்பு

புகழுக்கும் செல்வத்துக்கும் ஞானத் தேவியை உபாசனை செய்வது உலகத்து இயல்.

ஆனால் பாரத தேசத்தார்கள் எக் காலத்திலும் அந் நோக்கம் இல்லாது, ஞானத் தேவியைக் கேவலம் அவளுடைய திருவருளின் பொருட்டாகவே உபாசனை செய்யும் வழக்கம் உடையவர்கள்.

யக்ஞம்

தேச க்ஷேமத்தின் பொருட்டு - அதாவது, விராட் ரூபமாகிய சைதந்நியத்தின் பொருட்டு- ஒருவன் தனது நேர முழுதையும் செலவிட்டு, தனது சிந்தனைகளை எல்லாம் அதற்கே ஆக்கி, தனது செல்வம், தேக சுகம், உள்ளமைதி என்பவற்றை எல்லாம் அந் நெருப்புக்கே இரை கொடுப்பானாயின், அவன் செய்கிற யக்ஞம் மிகவும் பெருமை உடைத்தாகும்.

தேசத்தின் ஞானம்

எல்லா வித்தைகளும் கலந்தால்தான் தேசத்தினுடைய ஞானம் பரிமளிக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாகம்

யாகம் என்பதன் பொருளை நாம் மிகத் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். பெரியதோர் இஷ்ட சித்தியின் பொருட்டாகச் சிறிய தற்கால சுகங்களை மனம் அறிந்து வெறுத்து விடுதலே யாகம்.

கல்வி பெறும் பொருட்டாக உணவு, நல்ல படுக்கை முதலிய சவுகரியங்களை மறந்து பாடுபடும் மாணாக்கன் யாகம் செய்கிறான்.

தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டாக, உலகத்தாரின் நிந்தை, பழி, விரோதம், தீங்கு முதலியவற்றைக் கணியாமல் உழைப்பவன் யக்ஞம் செய்பவன் ஆகிறான்.

தேசநலத்தின் பொருட்டாக, உயிரைத் தானம் செய்யும் படைவீரன் யாகம் செய்து வீர சுவர்க்கம் அடைகிறான்.

பூஜை

தவங்களில் உயர்ந்தது பூஜை. மனத்தைத் தீய நெறியில் செல்லவிடாமல் தடுப்பதற்கு மிகவும் சுருக்கமான உபாயம் அதனை நன்னெறியிலே செலுத்துதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தவம்

ஆத்ம ஞானத்தை - அதாவது, "எல்லாம் ஒன்று; எல்லாம் கடவுள்; எல்லாம் இன்பம்" என்ற ஞானத்தை - ஒருவன் தனது நித்திய அனுபவத்தில் பயன்படுத்தி நன்மை எய்த வேண்டுமாயின், அதற்காக அவன் கைக் கொண்டு ஒழுக வேண்டிய சாதனங்களில் மிக உயர்ந்தது தவம்.

ஞானி

விபத்துக்கள் வரும்போது நடுங்குபவன் மூடன். அவன் எத்தனை சாஸ்திரம் படித்து இருந்தாலும் மூடன்தான்.

விபத்துக்கள் வரும்போது எவன் உள்ளம் நடுங்காமல் துணிவுடன் அவற்றை எல்லாம் போக்க முயற்சி செய்கிறானோ, அவனே ஞானி. 'ஹரி ஓம்' என்று எழுதத் தெரியாத போதிலும் அவன் ஞானிதான்.

ஞானம்

'பாவத்தைச் செய்வது இல்லை' என்ற தீர்மானம் உண்மையாக இருக்க வேண்டும். ஞானமே அவ்வளவுதான். அதைக் காட்டிலும் பெரிய ஞானம் கிடையாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சரித்திரம் சொல்லும் பாடம்

லக்ஷ்மீதேவி எந்த இடத்திலும், ஒரே நிலையாக நிற்பது வழக்கம் இல்லை.

செல்வமும், அதனால் உண்டான பெருமையும் ஒரு கூட்டத்தாருக்கிடையே குறைவுபடும்போது உட்பொறாமையும், மாற்சரியமும் வெளிப்பட்டுத் தலைதூக்கி ஆடுகின்றன.

உலக சரித்திரத்தை அறிவுடன் படித்த புத்திமான்கள் இதனை நன்றாக அறிவார்கள்.

தொழில் இணக்கம்

நமது நாட்டில் எத்தனையோ விதமான கைத்தொழில்களில் பிரவேசித்து ஜனங்கள் லாபத்தை அடையலாம். அதற்கு முக்கியமாக வேண்டியது இணக்கம்.

கூட்டு வியாபாரம்

வியாபாரத்தில் கூட்டு வியாபாரம் எங்ஙனம் சிறந்ததோ, அதுபோலவே கைத்தொழிலிலும் கூட்டுத் தொழிலே சிறப்பு வாய்ந்ததாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோக்கமும் முயற்சியும்

நமது நோக்கம் எத்தனைக்கு எத்தனை பெரியதோ, அத்தனைக்கு அத்தனை நமது முயற்சியும் பெரியதாய் இருத்தல் வேண்டும்.

சத்தியத்தால் ஆகும் பலன்

சத்தியத்தால் ஆகும் ஒரு பலன் நித்தியம். மற்றொன்று முக்தி. இவ்விரண்டு பலன்களும் அதைக் கைப்பற்றும் யாருக்கும் சித்திக்கும்.

நம் நாட்டுச் சிறியோர்களும் பெரியோர் களும் சத்தியத்தைக் கைவிடலாகாது. அப்படியானால்தான் நமக்கு அழிவு ஏற்படாது.

உத்தம தர்மம்

ஒருவன் ஊருடன் கூடி வாழ விரும்பினால், ஊருக்கு வயிறு நிறைய அன்னம் போட வேண்டும்.

சிற்சிலர் புதிது புதிதான தர்மங்கள் கண்டுபிடிக்கிறார்கள். ஏழைக்கு அன்னம் போடுவதுதான் உத்தம தர்மம். இது முற்பாட்டனாருடைய தீர்மானம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வம் தந்த வரம்

■ தொழில் இன்றி இருப்பவனுக்கு விடுதலை இல்லை; ஞானம் இல்லை; பக்தி இல்லை. அவனுக்குச் சோறு கிடையாது. தண்டச் சோறு தின்று தொழில் செய்யாது இருப்பவன் கொழுத்து, நோய் கொண்டு சாவான்.

சந்தேகம், பயம் முதலிய பிசாசுகள் வந்து தாக்காமல் இருக்கும் பொருட்டாகவும், அங்ஙனம் தாக்கும்போது அவற்றை மடிக்கும் பொருட்டாகவும் தொழில் என்ற மருந்தைக் கடவுள் கொடுத்து இருக்கிறார்.

தெய்வ விதி

■ தெய்வ விதிகளுக்கு மாற்று இல்லை. கொடுமையும் அநீதியும் செய்வோர் கொடுமைக்கும் அநீதிக்கும் இரையாவர். பிறரை அடிமைப் படுத்துவோர், தாம் அடிமை களாக்கப்படுவர்.

சுதந்திரக் கொள்கை

■ சுதந்திரக் கொள்கையை உடையவன் தன் ஆத்மாவைத் தவிர்த்து மற்றெல்லாவற்றையும் இழந்துவிடச் சித்தமாய் இருக்கவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோவிலும் சிலையும்

கோவிலும் மடமும் பௌத்த மதப் பழக்கத்தால், வெளிநாடுகளிலிருந்து நமக்குக் கிடைத்த பேறுகள் என்று சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள்.

ஆனால், இப்போது இந்து மதப் பயிற்சிகளுள்ளே கோவிலும் சிலையும் நெடுந்தூரம் ஆழ்ந்து போய் விட்டன. ஆதலால், இப்போது இந்து மதத்திலிருந்து கோவிலைப் பிரிக்க முடியாது.

கலை எழுச்சி

ஒரு தேசத்து ஜனங்கள் மெய்யான உற்சாகமும், வீரத் தன்மையும், புகழும் கொண்டு இருக்கும்போது அங்கே பெரிய கலை எழுச்சி ஏற்படுகின்றது. . . . மகிழ்ச்சி இருந்தால்தான் கலைகள் வளர்ச்சி பெறும்.

கூத்தின் இலக்கணம்

தாள விஸ்தாரங்களைக் கூத்தன் தன் உடம்பிலே தோற்றுவிப்பதே கூத்தின் உடல். அபிநயமே கூத்தின் உயிர். தாளம் தவறாமல் ஆடிவிட்டால், அது கூத்து ஆகாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மையான கவிதை

பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம் போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப் பழகுவராயின், முந்தியவன் உண்மையான கவிதை எழுதுவான்; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான். இவனுடைய தொழிலிலே கவிதை இராது.

பாட்டும் நெசவும்

நெசவிலே நாட்டு நெசவு மேல்.

விலைக்கு நெய்வதைக் காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல்.

பணம் நல்லது. ஆனால், பணத்தைக் காட்டிலும் தொழில் அருமை மேல்.

காசிப் பட்டுப்போலே பாட்டு நெய்ய வேண்டும். அல்லது உறுதியான உழவனுக்கு வேண்டிய கச்சை வேஷ்டிபோலே நெய்ய வேண்டும்.

மல் நெசவு கூடாது; மஸ்லின் நீடித்து நிற்காது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனித வாழ்க்கையின் கோணல்

சொல்லைச் சாதாரணமாக நினைத்து விடலாகாது. உண்மைச் சொல் க்ஷேமமந்திரம் ஆகும். பொய்ச்சொல் அழிந்துவிடும்.

தான் உண்மை சொல்வது மிகவும் சிரமமாய் விட்டது. பிறர் உண்மை சொல்வதைக் கேட்கும்போது நாராச வாணமாய் விட்டது. சாதாரண நிலையில், மனித வாழ்க்கை அத்தனை கோணலாகி விட்டது; மனித அறிவு அவ்வளவு குழப்பம் அடைந்து நிற்கின்றது.

வேதமார்க்கமாகிய வேள்வியின் ரகசியப் பொருளை உணர்ந்து நடந்தால், உண்மை சொல்வதிலும் துன்பம் இராது; கேட்பதிலும் துன்பம் இராது. உலக வாழ்க்கையே தேவருக்குச் செய்யப்படும் வேள்வி அல்லவா!

செல்வர் கடமை

பொருளாளிகள் இடைவிடாத உழைப்பையும், அன்பையும், சமத்துவ நினைப்பையும் கைக்கொண்டால், உலகத்தில் அநியாயமாக உத்பாதங்கள் நேரிட்டு உலகம் அழியாமல் காப்பாற்ற முடியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாதாரண மனிதர் செய்கை

அச்சம், சினம் முதலிய சித்த விருத்திகள் தோன்றும்போது சாதாரண மனிதர் புத்தி தவறி வேலை செய்தல் சகஜம். அந்தச் சமயத்தில் ஜனங்களுக்கு யுக்தி, அனுபவம், சாஸ்திரம் என்ற மூன்றுவிதப் பிரமாணங் களும் மறந்து போய் விடுகின்றன. எனவே, புத்தியீனமான காரியங்கள் செய்து பெரிய நஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர்.

மனித ஜாதியின் வலிமை இன்மை

கண்ணைத் திறந்து கொண்டு படுகுழியில் விழுவதுபோல, மனித ஜாதி நன்மையை நன்றாய் உணர்ந்தும் தீமையை உதற வலிமை இன்றித் தத்தளிக்கிறது.

இதற்கு என்ன நிவாரணம் செய்வோம்? தைரியம் தான் மருந்து. தற்கால அசௌகரியங் களையும் கஷ்ட - நஷ்டங்களையும் பொருட் படுத்தாமல் மனிதர் உண்மை என்று கண்டதை நடத்தித் தீர்த்து விட வேண்டும். அங்ஙனம் தைரியத்துடன் உண்மை நெறி பற்றி நடப்போரை மற்றவர்கள் புகழ்ச்சியாலும் சம்மானங்களாலும் ஊக்கப்படுத்த வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மடாதிபதிகளின் கடமை

மடாதிபதிகள் மடத்தின் மூலதனத்தின் ஒரு பகுதியைக் கொண்டும், தனவான்கள் கொடுக்கும் பாதகாணிக்கையைக் கொண்டும் முதல் சேர்த்துக் கொண்டு தொழிற் சாலைகளை ஏற்படுத்தலாம் அல்லது ஏற்பட்டிருக்கும் தொழிற் சங்கங்களிலும், வர்த்தகச் சங்கங்களிலும் பணம் கொடுத்துப் பங்குகளை வாங்கிக் கொள்ளலாம். அப்படி செய்வதால் மடத்தினுடைய திரவியம் விருத்தி அடைவதோடு ஜனங்களும் லாபம் அடைவார்கள்.

உடைமைக்குக் காரணம்

ஒருவன் தன் காலத்திலே செய்யும் செய்கைகளும், அவன் முன்னோர் செய்துவிட்டுப் போன செய்கைகளுமே உடைமைக்குக் காரணம் ஆகும்.

ஏழ்மைக்கும், செல்வத்துக்கும் காரணம் தெரிய வேண்டுமானால், அர்த்த சாஸ்திரம் (பொருள் நூல்) பார்க்கவேண்டும். ஜன்மாந்தர விஷயங்களைக் கொண்டு வருதல் வீண் பேச்சு. அதிலே பயன் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுமையைத் தீர்க்க மருந்து

■ சிலருக்குச் சோறு மிதமிஞ்சி இருக்கப் பலர் தின்னச் சோறு இல்லாமல் மடியும் கொடுமையைத் தீர்த்து விடவேண்டும்.

பூமியின் மீதுள்ள நன்செய், புன்செய், தோப்பு, துரவு, சுரங்கம், நதி, அருவி, குப்பை, செத்தை, தரை - கடவுளுடைய சொத்தில் நாம் வேலி கட்டக்கூடிய பாகத்தை எல்லாம் - சிலர் தங்களுக்குச் சொந்தம் என்று வேலி கட்டிக் கொண்டனர்.

பலருக்கு ஆகாசமே உடைமை. வாயு ஆகாரம். இதற்கு மருந்து என்ன என்றால், 'எல்லாரும் சமானம் அண்ணன் தம்பி போல' என்ற புத்தி உண்டாய் ஏழைகள் வயிறு பசிக்காமல் செல்வர்கள் காப்பாற்ற வேண்டும்.

நல்ல காரியம் செய்ய

■ ஒரு நல்ல காரியம் செய்யத் தொடங்குவோன், அதை ஒரே நீட்டாக வருடக் கணக்கில் நீட்டி, மற்றவர்களுக்கு அதுவே ஒரு தீராத் தொல்லை ஆகும்படி செய்யலாகாது, "சுபஞ்ச சீக்கிரம்:" நன்மையைத் துரிதப்படுத்த வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கர்மமும் பயனும்

'கர்மம் உனக்கு உரியது; நீ பயனைக் கருதுதல் வேண்டா' என்று கண்ண பெருமான் பகவத் கீதையில் சொல்லி இருப்பதற்கு இக் காலத்தில் பலர் பொருள் உணர்ந்து கொள்ள மாட்டாதவர்களாக இருக்கின்றனர்.

பயனே மனிதருக்குக் கிடைக்காத நிலைமையில் தொழில் புரிய வேண்டும் என்பது கீதையில் சொல்லப்பட்டதாகச் சிலர் நினைக்கிறார்கள். அந்த அர்த்தத்தில் பகவான் அந்த வசனத்தை வழங்கவில்லை என்பது கீதை முற்றிலும் வாசித்துப் பார்த்தவர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும்.

'தொழில் புரிந்து விட்டு வெற்றி அகப்படுமோ அகப்படாதோ' என்று எவரும் மனம் புழுங்குதல் வேண்டா. பயனுடைய தொழில் என்று புத்தியாலே நிச்சயிக்கப்பட்ட தொழிலை, ஒருவேளை அது பயன்தாராதோ என்ற பேதை சம்சயத்தால் நாம் நிறுத்தி வைத்தல் தகாது. தொழிலுக்குப் பயன் நிச்சயமாக உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தர்ம சிந்தனை

■ எவ்வித முயற்சியும் செய்யாமல், கொள்ளுப் பாட்டன் ஒருவன் தேடிவைத்த திரவியத்தைப் பூதம் காப்பதுபோலக் காத்துக்கொண்டு இருப்போர்க்கு தர்ம சிந்தனை ஏற்படுதல் அதி துர்லபம்.

இரண்டு சத்துருக்கள்

■ ஆத்ம விசாரத்திற்கு இரண்டே சத்துருக்கள் உண்டு. ஒன்று செல்வப் பெருக்கினால் உண்டாகும் இந்திரிய போகம். மற்றொன்று, வறுமைப் பெருக்கினால் உண்டாகும் தாங்க முடியாத கஷ்டம்.

இவ் விரண்டையும் ஒழித்து, சமரச வாழ்வை ஜனங்கள் பெற்றால்தான் ஆத்ம ஞானத்தை ஏற்கத் தகுதி அடைவார்கள். இந் நிலைக்கு ஜனங்களைக் கொண்டு வருவது மடாதிபதிகளின் கடமை ஆகும்.

உண்மையான தேசபக்தர்

■ கைத்தொழில் வளர்ச்சிக்காக உழைப்போரும் உண்மையான தேசபக்தரே ஆவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ன உலகமடா!

என்ன உலகமடா, இந்த மண்ணுலகம். ஒழியாத ஏமாற்று; ஒழியாத வஞ்சனை; ஒழியாத கவலை.

சாரமில்லை; சத்துக் கிடையாது; உள்ளூரப் பூச்சி அரித்துக் குழலாய் இருக்கும் வாழ்க்கை.

ஒவ்வொருவனும், தன் இஷ்டப்படி விட்டுவிட்டால் எல்லாம் நேராக நடக்கும் என்ற நம்பிக்கையுடனேதான் இருக்கிறான்.

ஆனால் 'நான் ஒருவன் சரியாக இருந்தால் போதுமா? மற்றவர்களை நம்புவதற்கு இடம் இல்லை' என்று எண்ணி ஏமாற்றுகிறான்.

ஐயோ, மூடா! நீ ஏமாற்றுவதனால் முன்னைக் காட்டிலும் பரஸ்பர நம்பிக்கை அதிகரித்து விடும் என்றா நினைக்கிறாய்?

சுதேச அபிவிருத்தி

சுதேச அபிவிருத்தியிலே விருப்பம் உடையவன் பரதேச வஸ்துக்களை வர்ஜனம் செய்யக் கடமைப்பட்டவன் ஆவான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறு ஜென்மம்

செத்துப்போன பிறகு மறு ஜென்மம் உண்டா? உண்டு. மனோதைரியம் இல்லாத பேடிகள் புழுக்களாகப் பிறப்பார்கள். பிறர் துன்பங்களை அறியாமல் தமது இன்பத்தை விரும்பினோர் பன்றிகளாகப் பிறப்பார்கள். சொந்த பாஷை கற்றுக் கொள்ளாதவர் குரங்குகளாகப் பிறப்பார்கள். சோம்பேறிகள் எருமைகளாகப் பிறப்பார்கள். அநீதி செய்வோர் தேளாகப் பிறப்பார்கள். பிறரை அடிமைப்படுத்துவோர் வண்ணான் கழுதைக ளாகப் பிறப்பார்கள். ஸ்திரீகளை இமிசை செய்வோர் நபும்சகராகப் பிறப்பார்கள். சமத்துவத்தை மறுப்போர் நொண்டிகளாகப் பிறப்பார்கள். கருணை இல்லாதவர் குருடராகவும், தமது கல்வியைப் பிறருக்குக் கற்றுக் கொடாதவர் ஊமைகளாகவும், அச்ச முடையோர் ஆந்தைகளாகவும் பிறப்பார்கள்.

மறு ஜன்மம் வரையிலேகூடப் போக வேண்டாம். இந்த ஜன்மத்திலேயே பாவி, கோழை முதலியவர்கள் தாழ்ந்த ஜந்துக்களாக இருப்பதை அவர்களுடைய அந்தக்-கரணத்திலே பார்க்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக - பர சாதனம்

சாஸ்திரப் படிப்பு முக்கியம். அதிலேதான் நன்மை எல்லாம் உண்டாகிறது. சயின்ஸ் மனித ஜாதியை உயர்த்திவிடும். அது இகத்துக்கு மாத்திரமே அன்றிப் பரத்துக்கும் சாதனம் ஆகும்.

கவலையோ கவலை

ஒருவனது முகத்தில் உள்ள அழகையும், குளிர்ச்சியையும், இளமையையும் இந்தக் கவலைகளே அழித்து விடுகின்றன. கண்களின் ஒளியை மாற்றிப் பசலையும், உடல் நிறம் மங்குதலும் உண்டாக்கி விடுகின்றன. நெற்றியிலே வரிகளும், கன்னங்களிலே சுருங்கல்களும் இந்த நீசக் கவலைகளி னாலேயே ஏற்படுகின்றன.

தொண்டையின் இனிய குரல் போய் கடூரமான கரகரப்புச் சத்தம் உண்டாகிறது. மார்பிலும், தோளிலும் இருந்த வலிமை நீங்கிப் போய் விடுகிறது. இரத்தம் விரைவாக ஓடுத லின்றி, மாசு நீரோடை போல மந்தம் அடைகின்றது. கால்களில் தீவிரம் இல்லாமல் போய் விடுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுதேசியத்தின் நோக்கம்

அன்னிய தேசத்தில் செய்துவரும் பொருள்களை விலக்கி வைத்து விட்டு, நமது தேசத்துச் சாமான்களையே விலைக்கு வாங்கி, நமது வர்த்தக நிலையையும், பொருள் நிலையையும் விருத்தி செய்து கொள்ள வேண்டும் என்பதே "சுதேசியத்"தின் நோக்கம்.

கைத்தொழிலும் சுதந்திரமும்

எந்தத் தேசத்தில் பிரஜைகளுக்கு ராஜரீக சம்பந்தமான சுதந்திரங்கள் அதிகமாய் இருக்கின்றனவோ, அந்தத் தேசத்தில்தான் கைத்தொழிலும் விருத்தி ஆகின்றது.

இன்னும் கைத்தொழில் எந்தத் தேசத்தில் மும்முரமாய் நடக்கின்றதோ அந்தத் தேசத்துப் பிரஜைகள்தாம் ராஜரீக சுதந்திரங்களை இலகுவில் அடைகிறார்கள்.

இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று இன்றி அமையாதனவாயும், ஒன்றை ஒன்று இயக்கும் கருவியாயும் இருக்கின்றனவே அன்றி வேறு இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தே மாதரம்

வந்தே மாதரம்.

இதுவே உயிரின் ஒலி. "இந்துஸ்தானத்தை வணங்குகிறேன்; ஹிந்து தர்மத்தைப் போற்றுகிறேன்; லோக நன்மைக்காக என்னை மறந்து என்னை இரை கொடுப்பேன்".

இதுதான் ஜீவசக்தியின் சாந்தி வசனம்.

ஹரி நாமம் பிரகலாத ஆழ்வானுக்கு எப்படி இருந்ததோ, அப்படியேதான் நமக்கு இப்போது "வந்தே மாதர" மந்திரம். இதுதான் நமது பாரத புத்திரர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, எம்மதத்தவர் ஆயினும் நிர்விவாத சம்மதத்துடன் அனுஷ்டிக்க வேண்டிய நம் பாரத மதம்!

சுயாதீனம்

எந்த மனிதனாகட்டும், எந்த ஜாதியாகட்டும் எந்த க்ஷணத்தில் சுயநலத்தையும், அஞ்ஞானத்தையும் தம்மை விட்டு அகலச் செய்கிறார்களோ, அந்த க்ஷணமே மோட்சத்தை அதாவது வீட்டை அடைவார்கள். அதுவே சுயாதீனம்; சுதந்திரம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுதந்திர முயற்சியின் வேர்

பொருளுக்கு இருக்கும் வல்லமை மிகப் பெரிது. இந்திய ஜனங்கள் பொருள் நிலையிலே மிகவும் இழிந்திருப்பது பற்றியே அவர்கள் விரும்பும் மற்ற சுதந்திரங்கள் கிடைப்பது இத்தனை கஷ்டமாய் இருக்கிறது.

நம்மவர்கள் பொருள் அபிவிருத்தி (தத்தமக்கு மட்டும் அன்று, நாட்டுப் பொதுமைக்கு) செய்ய முயலுதல் சுதந்திரப் பெருமுயற்சியின் முக்கியமான வேர்களில் ஒன்று ஆகும்.

தேசத்தின் அபிவிருத்தி

தேசத்தின் அபிவிருத்திக்குப் பரோபகார சிந்தையுள்ள மேதாவிகளின் இடையறாத உழைப்பே சாதனம்.

வாள் சிறிது காலத்துக்குக் காப்பாற்றுவது போலே நடிக்கும். பிறகு சர்வ நாசத்தில் கொண்டே சேர்க்கும். தைரியமும் ஒற்றுமையும் தந்திரமும் சேர்ந்தால், இவற்றுக் கெதிரே கோடி பீரங்கிகள் நிற்பினும் அஃதோர் பொருட்டன்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யார் பிராமணன்?

பிராமணர்கள் உலக இன்பங்களிலேயும் அவற்றுக்கு ஆதாரமாகிய செல்வத்திலேயும் மிகுந்த ஆசை இல்லாதவர்களாய், மற்றப் பொது ஜனங்களுடைய அறிவு விருத்திக்கும், தர்ம வளர்ச்சிக்கும் அனுகூலமான முயற்சிகளைப் பிரதிப் பிரயோஜனம் கருதாமல் நடத்தி வரவேண்டும். அப்படி யார் செய்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் பிராமணர்களே.

102875

ஜாதி பேதம்

பகவத் சந்நிதியிலே ஜாதிபேதம் இல்லை. அத்தனை பேரும் கலந்து நிற்கலாம்.

வேதமாகக் கொள்

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. "ஜாதி இரண்டொழிய வேறில்லை" என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY

	Signature	Date
Acces on	[illegible]	1?.11.58
Class on		
C...		
Tag etc		
Filing		
E.A.R		
Any other		
Checked		

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டாக்டர் நல்லி குப்புசாமி

செல்வத்திலும் சிறப்பிலும் மேன்மை பெற்று விளங்கும் பிரபல பட்டுத் தொழில் அதிபர்; தெய்வ பக்தியிலும் தேச பக்தியிலும் தோய்ந்தவர்; அன்பே உருவானவர்; பண்பாளர்; சிறந்த சிந்தனையாளர்.

பட்டுக்கொரு நல்லி செட்டியார் அவர்கள் நாடறிந்த பாட்டுக்கொரு புலவன் பாரதியின் கருத்துமணிகளை **மகாகவி பாரதியார் மணிமொழிகள்** என்பதாக நமக்கு வழங்கி யுள்ளார்.

சிந்தனை வளம் கொண்ட நூலைப் படித்துப் பயனடைவோமாக!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

M. K. Colour Process, Madras-14.